ISSN 1391-9504

# Vijey විජය
# விஜய்

23.12.2009 - மலர் 06, இதழ் 42



## இனிய நத்தார் வாழ்த்துக்கள்

## விலங்குகளின் தொடர்பாடல் முறைகள்

## இலங்கை - இந்திய கூட்டு ரெயில் சேவைகள்

விலை
ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ரொபர்ட் நொக்ஸின் மறுமொழி


தி ஆன் கப்பலுக்கு ஏற்பட்ட சிதைவுகளை புனருத்தாரணம் செய்ய நீண்ட காலம் இந்நாட்டில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கப்பலில் உள்ளவர்களின் வழியாக (ஆங்கில) பிரித்தானிய கிழக்கிந்திய சங்கத்துடன் கடிதத் தொடர்புகளை மேற்கொள்ள இராஜசிங்க மன்னன் முயற்சித்தான். உடனே அவர்களை அழைத்து வரும்படி அப்பிரதேச திசாபதிக்கு கட்டளையிட்டான். அதன்படி, திசாபதி கொட்டியாரத்திற்கு சென்றார். அப்பொழுதும் அக்கப்பல் கடற்கரையிலேயே நிறுத்தப்பட்டிருந்தது. அதாவது, கடற்கரையிலிருந்து சற்றுத் தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. திசாபதியோ கடற்கரையிலிருந்து வெகுதொலைவில் தங்கி இருந்தார். கப்பலின் மாலுமியாக ரொபர்ட் நொக்ஸ் என்பவர் இருந்தார். அவர் தனக்கு அவ்வளவு தூரம் வரமுடியாதென்றும் கடற்கரைக்கு என்றால் வரமுடியுமென்றும் தெரிவித்து தனது மகனையும் இன்னொருவரையும் தரைக்கு அனுப்பினார். இதற்கிடையில் திசாபதி கடற்கரைக்கு வருவதாக அவர்களுக்கு செய்தி கிடைத்ததால் கடற்கரையில் இறங்கி திசாபதி வரும்வரை நொக்ஸ் காத்திருந்தான். எப்படியிருந்தபொழுதிலும் மன்னனின் சேவையாளர்கள் நொக்ஸை கைது செய்தனர்.

மாலுமிக்கு எவ்வித ஆபத்தும் விளையாது என்றும் இங்கிலாந்திற்கு பிரதிநிதி ஒருவரை அனுப்பும் நோக்கம் மன்னனுக்கு உண்டு என்பதையும் திசாபதி கப்பலுக்கு செய்தி அனுப்பினார். அது மாத்திரமல்ல. அவ்வாறு அனுப்பும் பிரதிநிதி கப்பலில் ஏறுவதற்கு வசதியாக களப்பிற்கு அருகில் கப்பலைக் கொண்டுவரும்படியும் கேட்டுக்கொண்டார்.

நொக்ஸ் மாலுமி அக்கருத்தை நம்பவில்லை. கரையில் இருக்கும் தமது ஆட்கள் சிலரை மீண்டும் கப்பலுக்கு அனுப்பாவிட்டால் கப்பலில் இருப்பவர்கள் தமக்கு கீழ்ப்படியமாட்டார்கள் என கூறினார். அத்துடன், கப்பலில் சேவையாற்றும் இருவரையும் கப்பலுக்கு அனுப்பினார். எனினும், அவர்கள் மீண்டும் கரை திரும்பவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### உ/தரப் பரீட்சைப் பெறுபேறு:

# மீளாய்வுக்கான விண்ணப்பம் 24 ஆம் திகதி வரை

இவ்வாண்டு நடைபெற்ற க.பொ.த உயர் தரப் பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு' செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான முடிவுத்திகதி மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இம்மாதம் 24 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

விண்ணப்பங்களை அனுப்பும் போது பாடசாலை பரீட்சார்த்திகள் அதிபர்களூடாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தனியாகவும் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

### ஸ்ரீ பாத கல்லூரியில்

# பட்டப்படிப்புக்கான அனுமதி 140 பேருக்கே வழங்கப்படும்

## கல்லூரியின் பீடாதிபதி தெரிவிப்பு


இம்முறை ஸ்ரீ பாத கல்லூரியில் பட்டப்படிப்புக்காக 140 மாணவர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

மேற்படி கல்லூரி அனுமதிக்காக இம்முறை சுமார் 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்திருக்கின்ற நிலையில், 140 மாணவர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.


இதன்படி, ஆரம்ப வகுப்புப் பிரிவு-25, சமூகக்கல்விப் பிரிவு-20, தமிழ்ப் பிரிவு-30, கணிதப் பிரிவு-10, விஞ்ஞானப் பிரிவு-20, நடனப் பிரிவு-10, சங்கீதப் பிரிவு-25 என்ற அடிப்படையிலேயே மாணவர்கள் அனுமதித்துக்கொள்ளப் படவுள்ளனர். அத்துடன், 0.7 தொடக்கம் 0.8 இற்குக் குறையாத Z-score புள்ளிகளைப் பெற்றிருப்பவர்களே அனுமதியைப் பெறுவதற்கான தகுதியுடையோராவர் என்று ஸ்ரீ பாத கல்லூரியின் பீடாதிபதி சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

Vijey விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# எலும்புகளாக 'சிந்தூரம்'



எமக்கு நேர்கின்ற விபத்துக்களாலும் உடற்கோளாறுகளாலும் எலும்புகள் பாதிக்கப்படுகின்றன. இவ்வாறான நிகழ்வுகளின்போதான என்பு முறிவுகள் உள்ளிட்ட சரி செய்யமுடியாத எலும்புகளுக்குப் பதிலாக இரும்புப் பட்டைகள், செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட எலும்புகளைப் பொருத்துதல் போன்ற செயற்பாடுகள் வழமையில் இருந்து வருகின்றன. எனினும், இயற்கை எலும்புகளுடன் இணைந்து செயலாற்றுவதில் அவை முழுப்பலனையும் தருவதாக அமையவில்லை.








இதுபோன்ற பாதிப்புகளுக்கு புதிய மருத்துவ முறையின்படி, எலும்புக்குப் பதிலாக மரத் துண்டுகளைப் பயன்படுத்தலாம் என மருத்துவ வல்லுனர்கள் குறிப்பிடுகின்றனர். சிந்தூரம் (Red Oak) எனும் ஒருவகை மரம் இதற்குப் பயன்படுகிறது. இவை இங்கிலாந்தில் அதிகமாகக் காணப் படுகின்றன. இந்த மரத்துண்டுகளை எலும்புகளாகப் பயன்படுத்தும் ஆய்வில் இத்தாலி ஆய்வாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இவை உறுதியானவை. இவற்றில் நுண்துளைகளை ஏற்படுத்தி எலும்புகளுக்குப் பதிலாக பயன்படுத்தலாம். இதனால், குருதி ஓட்டத்திலும் சிரமம் இருக்காது. இயற்கை எலும்புகளுடனும் முழு ஒத்துழைப்பைக் கொடுக்கும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

இந்த மரத்துண்டுகளின் வைரம் பாய்ந்த பகுதிகளை எடுத்து-சூடாக்கி-அதில் ஈரத் தன்மை மற்றும் கிருமிகள் ஏதேனும் இருந்தால் அதனை அகற்றிவிடுவார்கள். பின்னர் பாதிக்கப்பட்ட இடத்தில் சேதம் அடைந்த எலும்புகளை அகற்றிவிட்டு இதனைப் பொருத்துவார்கள். நாளடைவில் அவை இயற்கை எலும்புகளுடன் ஓர் இணைப்பை ஏற்படுத்திக்கொண்டு நிஜ எலும்புகள் போலவே செயல்படும். சில ஆண்டுகளுக்குப் பின்னர் இயற்கை எலும்புக்கும் மரத்துண்டு எலும்புக்கும் வித்தியாசமே தெரியாதபடி அதன் பணிகளும் தோற்றமும் மாறிவிடும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

# எய்ட்ஸ் தின வினா-விடைப் போட்டியில் ஸ்ரீகோணேஸ்வராவுக்கு முதலிடம்




கிழக்கு மாகாண சுகாதார திணைக்களத்தினால் உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு க.பொ.த உயர் தர மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட வினா-விடைப் போட்டியில் திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இந்த சுற்றுப்போட்டியில் திருகோணமலை வலயப் பிரிவிலிருந்து 14 பாடசாலைகள் பங்குபற்றியிருந்தன. இறுதிச் சுற்றில் ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியுடன் ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி போட்டியிட்டு, அதில் ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி வெற்றியீட்டியது.

மாணவர்களுக்கிடையில் எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வையும் அறிவினையும் ஏற்படுத்தும் வகையிலேயே இப்போட்டி ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# நாடெங்கிலும் ஒரே தினத்தில் பல்கலைக்கழக அனுமதி



எதிர்வரும் கல்வி ஆண்டுக்காக பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களை நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக்கழகங்களுக்கு ஒரே தினத்தில் அனுமதித்துக்கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக சகல பல்கலைக்கழக நிர்வாகிகளுடனும் கலந்துரையாடப் பட்டுள்ளதாகவும் அறியக்கிடைக்கின்றது.

மேற்படி, பல்கலைக் கழக அனுமதியின் போது வடக்கு, கிழக்கு பல்கலைக்கழகங்களுக்கும் எந்தவிதமான பேதங்களுமின்றி மாணவர்கள் அனுமதித் துக்கொள்ளப்படவுள்ளனர் என்றும், பல்கலைக் கழக விண்ணப்பத்திற்கான பிரவேசக் கைநூல் விரைவில் வெளியிடப் படும் எனவும் தெரிவிக் கப்படுகின்றது.

60 DAYS ENGLISH COURSE
தபால் மூல ஆங்கில பாடநெறிகள்
இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி
E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத.வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது. (வயது கட்டுப்பாடு தேவையில்லை)
60 நாட்கள் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.

FREE FREE T. SHIRT
இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHIRT ஒன்று இலவசமாக வழங்கப்படும்

இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியான 2 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**இன்றைய 21 ஆம் நூற்றாண்டில் மனித வாழ்வில் என்றும் எதிலும் கணினியின் ஆதிக்கமும் முக்கியத்துவமும் அதிகரித்தே செல்கின்றது. ஒப்பீட்டளவில் ஏனைய கண்டுபிடிப்புகளைவிட கணினி நம் வாழ்க்கையின் பல்வேறு பணிகளில் பெரும் பங்களிப்பைச் செய்து வருகின்றது. அத்துடன், கணினி இன்று உலகையே ஆளத் தொடங்கிவிட்டது எனின் அது மிகையில்லை எனலாம்**

# கணிப்பொறி வளர்ச்சிக்கு வித்திட்ட சார்ள்ஸ் பபேஜ்


1812 ஆம் ஆண்டு சார்ள்ஸ் பபேஜ் கண்டுபிடித்த கணக்குப் போடும் இயந்திரம்தான் இன்றைய கணிப்பொறி வளர்ச்சிக்கு அடிப்படையாகும். இவர் 1792 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி பிறந்தார். இவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியராகப் பணியாற்றி வந்தபோது இந்த முறையைக் கண்டறிந்தார்.


தன்னியக்க கணித இயந்திரம் வில்லியம் ஹெட்ரெட் என்பவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1622 ஆம் ஆண்டு அவர் பெருக்குவதற்கும் வகுப்பதற்கும் ஒரு கருவியைக் கண்டு பிடித்தார். அது ஜோன் நேப்பியரின் அட்சர கணிதத்தை அடிப்படையாகக் கொண்டது. கணித இயந்திர விதியால் ஒருவர் பெருக்குவதையோ, வகுப்பதையோ நொடியில் செய்து முடித்து விடலாம்.











## சார்ள்ஸ் பபேஜின் கல்வியறிவு

சார்ள்ஸ் பபேஜ் ஓர் ஆங்கில கணிதவியல் அறிஞர் ஆவார். அவர் அட்சர கணித வாய்ப்பாட்டு துல்லியத்தை முன்னேற்றுவதன் மூலம் கணக்கிடுதல் முறையின் தானியக்கத்தை அதிகப்படுத்த முடியும் என்று உணர்ந்தார். அத்துடன், 1810 இல் கேம்பிரிட்ஜில் டிரினிட்டி கல்லூரியில் நுழைந்தார். எனினும், புத்தகக் கல்வியால் அவருக்கு பூரண திருப்தி ஏற்படவில்லை.

## பகுத்து ஆராயும் கழகம்

புத்திஜீவியான பபேஜ் ஒருமுறை நுண்ணிய வேறுபாடு சம்பந்தமான மற்றும் பூரணமான கால்குலஸ் பற்றிய Lacroix புத்தகத்தை வாங்க முயற்சித்தார். அப்பொழுது பிரான்ஸை ஆண்ட மாவீரன் நெப்போலியனுடன் பிரித்தானியா யுத்தத்தில் ஈடுபட்ட உச்சக் காலகட்டமாக இருந்தது. இதனால், அந்தப் புத்தகத்தை வாங்குவது இலகுவானதாக இருக்கவில்லை. அந்தப் புத்தகத்தின் ஒரு பிரதிக்காக பெருமளவுபணம் அறவிடப்பட்டது. இத்தொகைக்கு ஈடுகொடுக்க பபேஜ்ஜின் பொருளாதார நிலைமை இடம் கொடுக்கவில்லை.

அதனால், அந்தப் படைப்புக்களைமொழி பெயர்க்க ஒரு கழகம் அமைக்க எண்ணினார். தனது எண்ணப்படி அதற்கான முயற்சிகளில் தீவிரமாக இறங்கினார். 1812 இல் 'பகுத்து ஆராயும் கழகம்' அமைக்கப்பட்டது. அதில் அனைத்து கேம்பிரிட்ஜ் பட்டம் பெறவிருக்கும் மாணவர்களும் உறுப்பினர்கள் ஆனார்கள். 1813 இல் முதற் பதிப்பு வெளிவந்தது. இதன் பின்னர் 1814 இல் பீட்டர் ஹவுஸ் கல்லூரியிலிருந்து பட்டதாரியாக சார்ள்ஸ் பபேஜ் வெளியேறினார்.

## அவர் எழுதிய பல்வேறு நூல்கள்

1814 இல் பபேஜ் திருமணம் புரிந்துகொண்டு 1815 இல் கேம்ப்ரிட்ஜை விட்டு லண்டன் சென்றார். 1815 மற்றும் 1816ஆம் ஆண்டுகளில் செயல் புரிகிற சமன்பாடு பற்றி இரு முக்கிய புத்தகங்களை எழுதினார்.

1816 இல் அவரின் 24 ஆவது வயதில் லண்டனில் உள்ள 'ரோயல் சொஸைட்டி' அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து சில ஆண்டுகள் பல வித்தியாசமான கணிதத் தலைப்புக்களில் புத்தகங்களை எழுதினார். ஆனால், அவை எதுவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கவில்லை. அந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற அறிஞர் கழகங்களின்மீது அவருக்கு திருப்தி இருக்கவில்லை. மாறாக, மிகுந்த அதிருப்தியே அவருக்கிருந்தது.

1819 இல் அவர் வானவில் ஆய்வுக்கருவிகளின் மீது அதிக நாட்டம் கொண்டு அதில் தீவிரமாகச் செயல்பட்டார். அதன்மூலம் அவர் வெளியிட்ட கருத்துக்கள் அதிக மதிப்புள்ளதாக இருந்ததோடு இயந்திரக் குறிகளின் வித்தியாசமான முறைகளைப் பயன்படுத்தி வாய்ப்பாடு கட்டுமானத்தை திட்டமிட்டார். 1819 இல் சிறிய மாறுபட்ட நிலையில் பொறியியல் கட்டுமானத்தை ஆரம்பித்து 1822 இல் அதனை நிறைவு செய்தார். அவரின் மாறுபட்ட நிலப் பொறி வளர்ச்சிக்காக 1823 இல் வானவில் கழகத்திடமிருந்து தங்கப் பதக்கத்தைப்பெற்றார்.

## பொறி வடிவமைத்தல்

1830 ஆம் ஆண்டு பபேஜ் இங்கிலாந்தில் 'Reflections on the Decline of Science' என்ற விவாதத்திற்குரிய படைப்பை வெளியிட்டார். 1834 ஆம் ஆண்டு 'On the Economics of Machinery and Manufacturers' எனும் நூலை வெளியிட்டார். அந்த நூல் மிகுந்த செல்வாக்கைப் பெற்றது. அதில் இன்று நாம் 'செயல் முறை ஆராய்ச்சி' என்று அழைப்பதன் ஆரம்ப வடிவத்தை முன்மொழிந்தார்.

1934 இல் பபேஜ் அவர்கள் பகுத்து ஆய்வு செய்யும் பொறியின் முதல் வரைபடத்தை முடித்தார். எல்லையில்லா அளவு சேமித்து வைக்கக்கூடியதாக பகுத்து ஆராயக்கூடிய பொறியை வடிவமைத்தார்.

பபேஜ் செயல்முறை இயந்திரக் கணினியை வடிவமைக்காவிட்டாலும் அவருடைய எண்ணத்தின் வடிவம் சரியானது என்று நிரூபிக்கப்பட்டது. அண்மையில் பபேஜின் சொந்த வடிவ அலகுகளைப் பின்பற்றி அம் மாதிரிக் கணினி வடிவமைக்கப் பட்டது.

1871 இல் தனது 79 ஆவது வயதில் பபேஜ் காலமானார். அவரின் மரணத்தின்பின் அவருடைய மாதிரி வடிவத்தின் சாத்தியங்கள் பற்றி அறிக்கை தர ஒரு குழு பிரிட்டிஷ் கழகத்தினரால் நியமிக்கப்பட்டது. எனினும், பபேஜ் அவர்களின் மாதிரி வடிவத்தோடு ஒத்து இருக்கின்ற நவீன கணினிக் கட்டமைப்பு கணிதத்தின் முழுமையை மட்டும் மாற்றியமைக்கவில்லை. முழு உலகத்தையும் மாற்றிவிட்டது என்பதுதான் உண்மை.

-இரஞ்சித் ஜெயகர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளி வீராங்கனை சுனிதா

## எவ்வாறு விண்வெளி வீராங்கனையானார்?









(Above): Astronaut Sunita L. Williams works Feb. 19 the controls of the Space Station Remote Manipulator System in the Destiny laboratory of the International Space Station.
(Left): Astronaut Sunita L. Williams participates Feb. 4 in the second of three space walks in nine days.
(Below): Astronauts Michael E. Lopez-Alegria (l) and Sunita L. Williams, attired in their Extravehicular Mobility Unit spacesuits, prepare Feb. 8 for the start of the third space walk in nine days in the Quest Airlock of the International Space Station.

**சுனிதா வில்லியம்ஸ், இந்திய வம்சாவளிப் பெண். 2007 ஆம் ஆண்டு வெற்றிகரமாக விண்வெளி சென்று திரும்பினார். அவரது சாதனையை அமெரிக்கா மட்டுமன்றி, இந்தியாவும் உரிமையுடன் பாராட்டிக் கொண்டாடியது. விண்வெளி வீராங்கனையாக மிளிர்வதற்கு சுனிதாவைத் தூண்டிய காரணங்கள் எவை? அதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகள் தொடர்பான சுவாரஸ்யமான தொகுப்பே இது.**



1969 ஆம் ஆண்டு ஜூலை 21. அமெரிக்க விண்வெளி வீரர்களான நீல் ஆம்ஸ்ட்ரோங், ஒல்ட்ரின் ஆகிய இருவரும் சந்திரனில் கால் பதித்த நாள். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்தக் காட்சியை தொலைக்காட்சி மூலம் உலகெங்கும் வாழும் மக்கள் கண்டு களித்தனர். அந்த சாதனையைப் பற்றி அமெரிக்கா ஆனந்தமாகக் கொண்டாடியது. தொடர்ந்து பல வாரங்களுக்கு வீடுகள், கல்லூரிகள், கடை வீதிகள் என எங்கே பார்த்தாலும் மக்கள் அந்த சாதனையைப் பற்றி மட்டுமே பேசினார்கள்.

அப்போது சுனிதாவுக்கு வயது 4. ஆம்ஸ்ட்ரோங்கும் ஒல்ட்ரினும் நிலவில் குதித்து நடக்கின்ற காட்சியை தொலைக்காட்சியில் பார்த்துவிட்டு உற்சாகமடைந்த சுனிதா, தானும் ஒருநாளில் விண்வெளிக்குப் போவதாகவும் அங்கு நிலா, சூரியன், நட்சத்திரங்கள், செவ்வாய், வெள்ளி, நெப்டியூன் என அனைத்தையும் சுற்றிவருவதாகவும் கனவு காணலானாள்.

கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வேலை தேடிய சுனிதாவுக்கு முதலில் போர் விமானியாக வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. எனினும், அன்றைய அமெரிக்க ராணுவத்தில், பெண் போர் விமானிகளுக்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவே இருந்தது. அதற்காக அவர் விண்ணப்பித்த போதும், அவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. விமானம் ஓட்டாவிட்டாலும் அதே துறையில் வேறு ஏதேனும் வாய்ப்புகள் கிடைக்குமா? என்று தொடர்ந்து தேடினார். அயராத முயற்சியினை அடுத்து, சுனிதாவுக்கு அமெரிக்க ராணுவத்தில் விமானியாக வேலை கிடைத்தது. எனினும், அது அவர் விரும்பியதுபோல் ஜெட் விமானியாகவல்ல; ஹெலிகொப்டர் விமானியாகவே ஆகும்.






எனினும், அதற்காக சுனிதா மனம் தளரவில்லை. கிடைத்த வேலைக்கான பயிற்சியில் மிக உற்சாகமாக ஈடுபட்டார். ஹெலிகொப்டரை பற்றிப் பல விடயங்களை ஆர்வத்துடன் கற்றுத் தேர்ந்தார். இந்தக்கட்டத்தில் சுனிதாவுக்கு தனது சக ஹெலிகொப்டர் விமானிகளுடன் ஜோன்ஸன் விண்வெளி மையத்துக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கு அமெரிக்காவின் விண்வெளிச் சாதனைகள் அனைத்தும் புகைப்படங்களாகவும் ஓவியங்களாகவும் மாதிரிகளாகவும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

ஜோன்ஸன் ஆராய்ச்சி மையத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த விஞ்ஞானிகள், விண்வெளி வீரர்கள் அனைவரும் சுனிதா உட்பட ஏனைய ஹெலிகொப்டர் விமானிகளுடன் சகஜமாகக் கலந்துரையாடியதுடன், அவர்களுடைய அனுபவங்களைப் பற்றியும் தெரிவித்தனர். அவர்களில் குறிப்பாக ஜோன் யேங் என்ற விண்வெளி வீரர் அனைவரையும் வெகுவாகக் கவர்ந்தார். அவருடைய வசீகரமான முகமும் பேசுகிற பாணியும் சுனிதாவை அப்படியே கட்டிப்போட்டது. ஜோன் யேங் நிலவில் கால் பதித்த விண்வெளி சாதனையாளர் ஆவார்.

அப்போது அவர், ''உங்களுக்கு ஒரு சுவாரஸ்யமான விடயம் சொல்லட்டுமா?'' என்று சுனிதா உள்ளிட்ட குழுவினரிடம் வினவினார். பின்னர், ''உங்களைப் போலவே எனக்கும் நன்றாக ஹெலிகொப்டர் ஓட்டத் தெரியும் என்றும், நிலாவில் இறங்குவதற்காகவே நான் ஹெலிகொப்டர் ஓட்டிப் பழகினேன்'' என்றும் கூறினார்.

இதைக்கேட்ட சுனிதாவுக்கு ஒரே குழப்பம். ''நிலவுக்கும் ஹெலிகொப்டருக்கும் என்ன சம்பந்தம்'' என்று ஜோனிடம் கேட்டார்.

அதற்கு அவர், ''முதலில் எங்கள் விண்கலம் சந்திரனை நெருங்கிப் பறக்கும். பின்னர் அங்கிருந்து நாங்கள் சந்திரனில் இறங்கவேண்டும். அதற்கு ஹெலிகொப்டரை தரையிறக்குகிற அனுபவம் தேவை'' என்று பதிலளித்தார்.

''அப்படி என்றால், எங்களைப் போன்று ஹெலிகொப்டர் ஓட்டத் தெரிந்தவர்களும் என்றாவது ஒருநாள் நிலாவில் இறங்கலாமா?'' என்று சுனிதா ஆர்வத்துடன் கேட்டார்.

''நிச்சயமாக, கொஞ்சம் முயற்சி செய்தால் நீங்கள் அனைவருமே பிரமாதமான விண்வெளி ஆராய்ச்சியாளர்களாக வரலாம்'' என்று ஜோன் கூறினார்.

அவ்வளவுதான். இப்போது, ஹெலிகொப்டரில் இருந்து விண்வெளிக்குத் தாவுவது எப்படி என்று சுனிதா சிந்திக்கத் தொடங்கிவிட்டார். அன்றிலிருந்து அவரது சிந்தனை, பேச்சு, செயல் எல்லாமே நான் ஒரு விண்வெளி வீராங்கனையாக வேண்டும் என்றே அமைந்தன. அதற்குத் தேவையான தகுதிகள் என்னென்ன? அவற்றை நான் வளர்த்துக்கொள்வது எப்படி? என்று அவர் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டார்.

அன்று முதல் சுனிதா முன்பைவிட மிகக் கடுமையாக உழைத்தார். அந்த முனைப்பும் விடாமுயற்சியும் அவரைக் கைவிடவில்லை. விரைவில் சுனிதாவுக்கு அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான 'நாஸா'வில் இடம் கிடைத்தது. அங்கு பணியாற்றிக்கொண்டே தனது சிறு வயது கனவையும் நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய பாக்கியத்தை சுனிதா விரைவில் பெற்றுக்கொண்டார்.

ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி அடைவோம்

UNION கல்வி நிறுவனத்தின் புதிய வெளியீடு



SPOKEN ENGLISH BOOK விலை ரூபா 300/=
SPOKEN ENGLISH VIDEO CD விலை ரூபா 300/=



SPOKEN ENGLISH BOOK மற்றும் SPOKEN ENGLISH VIDEO CD யானது முழுமையாக தமிழ் விளக்கத்துடன் தயார் செய்துள்ளோம். இதணைக் கற்றுக் கொள்ள வயது எல்லையோ ஆங்கில முன் அறிவோ தேவையில்லை மற்றவர்களின் துணை அவசியமில்லை. ஆங்கிலத்தில் தயக்கமின்றி பிழையின்றி நண்பர்களுடன் உரையாட தகுந்த பயிற்சி அளித்துள்ளோம்.

இவை இரண்டையும் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் 600/= ரூபாவுக்கான காசுக் கட்டலை அல்லது ஏதாவாது ஒரு மக்கள் வங்கி கிளையில் கணக்கு இலக்கம் A/C NO. 003200170022486 A.A.M. MAASUD எனும் பெயருக்கு வைப்பு செய்து பற்றுச்சீட்டை. அல்லது காசுக்கட்டலை மூலம் என்றால் Director Union எனும் பெயருக்கு மாற்றப்படும் தபால் கந்தோர் Kandy என தெளிவாக குறிப்பிட்டு உங்கள் பெயர். முகவரி தொலைபேசி இலக்கம் என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு காசுக்கட்டலை அல்லது வங்கி வைப்பு பற்றுச்சீட்டையும் இணைத்து அனுப்பவும். (தபால் செலவு உட்பட)

UNION EDUCATIONAL INSTITUTE
P.o.Box 143 Kandy -Sri Lanka.
No.17 Peradeniya Road Kandy. Tel: 0817 918 981 0773-123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அமேசன் காடுகளில் வசிக்கும் 'ஹவுலர்' எனப்படும் குரங்குகள் அபாயத்தை எதிர்கொள்கையில் கூச்சல் போட்டு சத்தமிடும்

# பேசாதபோதும் தொடர் மேற்கொள்


கணவாய்கள்



**நாம் தொடர்பாடல்களின் ஊடாக தொடர்புகளைப் பேணுகின்றோம். இதேபோன்று விலங்கினங்களும் தொடர்பாடல்களை மேற்கொண்டு தொடர்புகளைப் பரஸ்பரம் பேணிக்கொள்கின்றன. பசியின்போது உணவு தேடிச்செல்வதைப் போன்று தமக்கு ஆபத்து நேரும்போது அதனை மற்ற விலங்கினங்களுக்கு அறிவிக்கும் ஆற்றலும் அவற்றுக்குண்டு. இதன்படி, நாம் அறிந்த விலங்குகளின் நடத்தைகள் பல்வேறு வகைப்பட்டதாக உள்ளன. பிறப்பிலேயே அவை மற்ற விலங்கினங்களுடன் தொடர்பாடலை மேற்கொள்ளும் ஆற்றலைக் கொண்டிருக்கின்றன. இங்கு முதலில் ஒரு குறிப்பிட்ட விலங்கினம் மற்ற விலங்குக்கு அபாயம் குறித்து எச்சரிக்கை விடுக்கின்றது. அடுத்ததாக அதன் நடத்தைகள் மாறுபடுகின்றன. இரண்டுக்கும் இடையில் தொடர்பாடல் ஏற்பட்டுள்ளது என்பது அப்பொழுதுதான் தெரிகின்றது. இவ்வாறு தொடர்பாடலின்போது தகவல் அளிப்பவர் Sender என்றும் அந்த தகவலைப் பெறுபவர் Receiver என்றும் அவ்வாறு பரிமாறப்படும் தகவல் Message என்றும் கூறப்படுகின்றன.**

## தொடர்பாடலுக்கு ஓர் ஊடகம்

தொடர்பாடலின்போது தகவல் பரிமாறப்பட ஓர் ஊடகம் அவசியமாகும். இவ்வாறு தகவல்கள் பயணிக்கும் ஊடகங்கள் பல உண்டு. ரசாயன இலத்திரனியல், பார்வை, அனல், ஒலி மற்றும் தொடுகை என்பன ஊடகங்களுக்கு உதாரணங்களாகும். இந்த ஊடகங்களைப் பயன்படுத்தியே விலங்கினங்கள் தகவல்களைப் பரிமாற்றம் செய்கின்றன. இத்தகவல்கள் இவ்வாறு ஊடகம் ஒன்றினைப் பயன்படுத்தி தகவல் பரிமாற்றம் செய்யும் விலங்கினங்கள் பற்றிய தகவலாகும்.

## ரசாயனத் தொடர்பாடல்

ஊர்வனவும் பூச்சிகளும் இவ்வாறான தொடர்பாடலை மேற்கொள்கின்றன. எறும்புப் புற்றுக்களில் இது பிரபலமான தகவல் பரிமாற்ற ஊடகமாகும். பூச்சிகளின் உடல்களில் பல ரசாயனத் திரவங்கள் உள்ளன. இவை தமது எதிர்ப்பால் துணைக்கு தகவல்களைத் தெரிவிப்பதற்கு 'பெரமோன்' என்ற இரசாயனத் திரவத்தைப் பயன்படுத்துகின்றன.

ஊர்வன தமது சிறுநீரினால் தொடர்பாடலை மேற்கொள்கின்றன. விலங்கினங்கள் மலத்தினையும் சிறுநீரையும் சுற்றுப்புறச் சூழலில் விட்டு விடுகின்றன. இவை அவற்றுக்கே உரிய கந்தக வாசனையைக் கொண்டிருக்கும். இவ்வாறு தமது எல்லைகளை வரையறுக்க அவை சிறுநீர் கழிக்கின்றன. இந்த வாசனையை மற்ற விலங்குகள் நுகர்ந்தவுடன் அது இன்னொரு விலங்குக்கு உரிய பிரதேசம் அல்லது இல்லம் என்று கருதுகின்றன. உதாரணமாக, மனிதர்களுக்கு ஏற்படும் வியர்வையைக் குறிப்பிடலாம். நாய்கள் தமது எஜமானரை இந்த வியர்வை மணத்தைக் கொண்டே அறிந்து கொள்கின்றன.

நாம் மேலே குறிப்பிட்ட 'பெரமோன்' எனும் இரசாயனத்தைப் பயன்படுத்தி சிசுக்கள் தமது தாயை அறிந்துகொள்கின்றன. சிசுக்கள் தமது தாயிடம் சென்ற பின் அழுகையை நிறுத்துவது இதனாலேயே.

## பார்வைத் தொடர்பாடல்

இது ஏனைய தொடர்பாடல் முறைகளை விட குறுகிய பகுதிக்கே பொருத்தமாக இருக்கும். இது பார்வைப் பகுதிக்குள் இடம் பெறுவதே இதற்குக் காரணமாகும். இதற்காக Chordata, Cephal Opoda மற்றும் கணவாய்களுக்கு விசேடமான பார்வை அமைப்புகள் உள்ளன. இது அவற்றின் கண்களில் உள்ள கண்பார்வையின் அமைப்பைப் பொறுத்ததாகும்.

அச்சமூட்டும் கவர்ச்சிகரமான நிறங்களைக் கொண்ட விலங்கினங்களும் இதற்கு உதாரணமாகும். நிறங்களை வெளிப்படுத்துவதன் ஊடாக அவை அபாயத்தை ஏனைய விலங்கினங்களுக்கு அறிவுறுத்துகின்றன. கோபமடைந்தவுடன் முக அமைப்பில் ஏற்படும் மாற்றங்களும் மற்ற







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கினங்களை அச்சுறுத்துகின்றன. ஒரு விலங்கு நல்ல மனநிலையில் இருக்கும் போதும் அதன் முக அமைப்பில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. முகஅமைப்பு மட்டுமன்றி கை கால்களை அசைப்பதன் ஊடாகவும் அவை தொடர்பாடலை மேற்கொள்கின்றன. இந்த முறையில் சக்தி எதனையும் விரயமாக்காது தகவல் பரிமாற்றம் செய்யும் வாய்ப்புள்ளது. எனினும், இராப்பொழுதில் கடும் இருட்டில் தொடர்பாடலை மேற்கொள்ள அவற்றுக்கு ஒலியே உதவியாக இருக்கின்றது.

## அனல் தொடர்பாடல்

சில குறிப்பிட்ட விலங்கினங்கள் மட்டுமே இந்த தொடர்பூடகத்தைப் பயன்படுத்துகின்றன. சில வண்டினங்கள் இந்த அனல் தொடர்பூடக முறையைப் பயன்படுத்துகின்றன. அவை தம்மைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காக அவ்வாறு செய்கின்றன. தாம் எதிரியின் பிடியில் அகப்படப்போகின்றோம் என்று அறிந்தவுடன் அந்த எதிரியின் உடலின் மீது அதிக வெப்பம் கொண்ட திரவத்தை வெளிப்படுத்துவது இதன் இயல்பாகும்.

வழைத்துக்கொள்ள, கூட்டமாகச் செல்லும் போது, பயணத்தின் முடிவின்போது, உணவுகள் கிடைத்த பின், அபாயத்தை கண்ணுற்ற பின் இவ்வாறு பறவைகள் ஒலி எழுப்புகின்றன.

✱ சில பூச்சிகள் தமது கருத்துக்களை வெளிப்படுத்த பலதரப்பட்ட ஒலிகளை எழுப்புகின்றன.

✱ வெட்டுக்கிளிகள் தமது சிறகுகளை

கடற் சிங்கங்கள் தமது வசிப்பிடங்களை வகுத்துக் கொள்வதும் ஒலி எழுப்புவதன் மூலமாகும். குழப்பமான சூழலை ஒலிகளை எழுப்புவதன் ஊடாக மீன்கள் ஏனைய மீன்களுக்குத் தெளிவுபடுத்துகின்றன. நீரில் ஒலி அலைகள் வேகமாகப் பயணிப்பதனாலேயே மீனினங்கள் ஒலி அலைகளை தொடர்பாடல் ஊடகமாகப் பயன்படுத்துகின்றன.



# பாடல்களை


அசைக்கும்போது ஒலி எழுப்புகின்றன. இவ்வாறு தமது கருத்துக்களை வெளிப்படுத்த பல்வேறு வகையில் விலங்கினங்கள் ஒலி எழுப்புகின்றன.

✱ ஈரூடக விலங்கினங்களும் ஒலிகளின் ஊடாக கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன. 'ரெட்டில்ஸ்னேக்' எனப்படும் ஒரு வகைப்பாம்பு தனது வாலின் நுனிப் பகுதியை அசைத்து ஒலி எழுப்புவதன் ஊடாக தம் அருகே வரும் சிறிய விலங்கினங்களையும் பூச்சிகளையும் உட்கொள்கின்றன.

✱ முதலைகள் தமது துணையை ஒலி எழுப்பியே வரவழைத்துக்கொள்கின்றன.

✱ பல்லிகள் சத்தம் இடுவதன் மூலம் அவற்றுக்கு இடையிலான தொடர்பாடலை மேற்கொள்கின்றன.





ஒலி எழுப்பும் பாம்பு

அதேவேளை, மண் புழுக்கள் ஒன்றோடு ஒன்று தொடுகை ஸ்பரிசித்தல் மூலம் தொடர்பாடலை மேற்கொள்கின்றன.



# ளும் விலங்கினங்கள்

## இலத்திரனியல் தொடர்பாடல்

இந்த முறையில் சில குறிப்பிட்ட இனங்கள் மட்டுமே தொடர்பாடல்களை மேற்கொள்கின்றன. மின்சார மீன்கள்,மின்மினிப் பூச்சிகள் என்பனவே அவையாகும். இந்த விலங்கினங்கள் தமது உடலைச் சூழ இலத்திரனியல் ஒளியைப் பரவ விடுகின்றன. இதன் ஊடாக இரைகளைத் தேடிக்கொள்கின்றன. அதற்கு அப்பால் அவற்றுக்கு பாதுகாப்பும் கிட்டுகின்றன.சில வேளைகளில் தமது துணையை வரவழைத்துக் கொள்ளவும் இலத்திரனியல் அலைகளை அவை பயன்படுத்துகின்றன.

## ஒலி தொடர்பாடல்

ஒலி மிக நீண்ட தூரம் பயணிக்கக்கூடிய ஆற்றலைக் கொண்டது. பெரும்பாலான விலங்கினங்களின் தொடர்பூடகமாக ஒலியே செயற்படுகின்றது.

அபாயம் பற்றி எச்சரிக்கை விடுக்கும் பறவைகளின் ஒலி இதற்கு உதாரணமாகும். மரத்தின் உயரத்தில் அமரும் பறவை தமது பகுதியை வரையறுத்து ஒலி எழுப்புகின்றது. சில பறவைகள் தாம் பறக்கும் பகுதிக்கு எப்பொழுதும் ஒலிகளை எழுப்பியே தொடர்பாடலை மேற்கொள்கின்றன. தமது எல்லைப் பகுதியைக் காட்ட, துணையை வர

✱ சில Rodents அதிக வேகமான Ultrasonic ஒலிகளை வெளியேற்றி அவை தனித்திருக்கும்போது அல்லது பசித்திருக்கும் போது ஒருவருக்கிடையில் தகவல்களை பரிமாற்றம் செய்கின்றன.

✱ பெரும்பாலான குரங்கினங்களும் ஒலிகளை எழுப்புவதன் ஊடாக தொடர்பாடலை மேற்கொள்கின்றன. எதிரிகள் வரும் போது குரங்குகள் கத்திக் கூச்சலிடுவது அதனாலேயே எனலாம்.


✱ பெரும்பாலான கடல் விலங்குகளும் தகவல் பரிமாற்றத்திற்கு ஒலி அலைகளைப் பயன்படுத்துகின்றன. திமிங்கிலங்கள் தமது துணையை வரவழைக்க வெளியேற்றும் Ultrasound 4000 மைல்களுக்கு அப்பாலும் கேட்கும்.

டொல்பின்கள் தமது துணையை வரவழைப்பதும்

தொடுகை

தொடர்பாடலை மிகச்சிறிய பகுதிக்குள் மேற்கொள்ள முடியும் என்ற போதிலும் சில விலங்கினங்கள் தமது விசேடமான உறுப்புக்களைக் கொண்டு சற்று தூரத்தில் நின்று தொடர்பாடலை மேற்கொள்கின்றன. நீண்ட தொடுகை உறுப்புக்களைக் கொண்ட கரப்பான் பூச்சிகள், வெட்டுக்கிளிகள் இவ்வாறுதான் தகவல்களைப் பரிமாறிக் கொள்கின்றன.

விலங்கினங்கள் மேற்கூறப்பட்ட தொடர்பூடக முறைகளில் ஆகக் குறைந்தது ஒன்றினையேனும் பயன்படுத்துகின்றன. ஆனால், மனிதர்கள் இவை அனைத்தையும் பயன்படுத்தி தகவல் பரிமாற்றத்தை மேற்கொள்கின்றனர்.




மான்கள் தமது துணையுடன் தொடர்பு கொள்ள கொம்பினைப் பயன்படுத்துகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இந்தியக்கூட்டு ரயில் சேவை



**1913** ஆம் ஆண்டுகளில் மதவாச்சியிலிருந்து நெரிய குளம், செட்டிக்குளம், மடுவீதி, முருங்கன், மாதோட்டம், திருக்கேதீஸ்வரம், மன்னார், தொட்டாவேலி, பேசாலை, தலைமன்னார் ஆகிய நகரங்களுக்கூடாக தலைமன்னார் இறங்குதுறைக்கு ரயில் பாதை அமைக்கப்பட்டது.அதற்குமுன் தென்னிந்திய தனுஷ்கோடி துறைமுகத்திலிருந்து கப்பலில் வந்த தமிழ் தோட்டத் தொழிலாளர் (ஆங்கிலேய ஆட்சியாளர் தேயிலை,கோப்பி பயிரிட்ட காலத்தில்) தலைமன்னார் இறங்குதுறையிலிருந்து மலைநாடு வரை நடந்தே சென்றனர்; அவ்வாறு மலையகம் சென்று சேர்ந்தோர் 10 சதவீதத்தினரேயாவர். ஏனைய 90 சதவீதத்தினரும் இடைவழியில் பல்வேறு தொற்றுநோய்களுக்கு உள்ளாகி இறந்தனர். அக்காலத்தில் கப்பல் பயணத்தை சாதாரண மக்களால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. இதனால், மலிவான கட்டணத்தில் அனுமதியற்ற படகுகளில் வறுமை காரணமாக தொழில் தேடிவருவோர் இலங்கையை வந்தடைந்தனர். இவர்களில் சிலர் கரை நெருங்குவதற்குமுன் இறக்கி விடப்பட்டதில் சிலர் உயிராபத்தையும் சந்திக்க நேர்ந்தது.

## பயண நிர்வாக வசதிகளுக்கு

இக்காலகட்டத்தில் இந்தியாவும் இலங்கையும் ஆங்கிலேய ஆட்சியின் பிடியில் இருந்ததால் இரு நாடுகளுக்கும் இடையிலான பயணச் சிரமத்தையும் செலவையும் குறைக்க கூட்டு ரயில் சேவை 1914 பெப்ரவரி 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதனால், தொலைதூரப்பயணங்களைக் குறைந்த கட்டணத்தில் பயணிக்க முடிந்தது. வர்த்தக கலைகலாசார சமூகத் தொடர்புகளுக்கு இது உதவியாக இருந்த போதும் ஆங்கிலேயரின் நிர்வாக வசதிக்கு இது பேருதவியாகவும் இருந்தது.

## அன்றைய அனுபவங்கள்

கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்திலிருந்தும் வேறு முக்கிய ரயில் நிலையங்களில் இருந்தும் சென்னை செல்வதற்கு ரயில் டிக்கட் வழங்கப்பட்டது. எனினும், தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையில் கப்பல் சேவையே நடத்தப்பட்டது.

இக்கடற்பயணத்துக்கு மூன்று மணித்தியாலமோ மூன்றரை மணித்தியாலமோ ஆகும். வசதி குறைந்த நிலையிலும் 700 அல்லது 800 பயணிகளை கப்பல் ஏற்றிச்செல்லும். ஒக்டோபர் முதல் ஜனவரி வரையான காலத்தில் வட திசைக்கடலில் கொந்தளிப்பு ஏற்படுவதால் கப்பல் சேவை நிகழாது. ஆக, இந்திய இலங்கை ரயில் சேவையை இணைத்தது அந்தக் கப்பல் சேவையேயாகும். இந்திய இலங்கை ரயில் சேவையானது திங்கள், வியாழக் கிழமைகளில் கொழும்பிலிருந்து நிகழும். இதனோடு சம்பந்தப்பட்ட மேலும் மூன்று ரயில் சேவைகளும் நடைபெற்றன. பதுளையிலிருந்து கொழும்புக்கு வரும் ரயில் பொல்கஹவலையில் இந்தியப் பயணிகளைத் தலைமன்னார் இறங்குதுறைக்குப் போகும் ரயிலுடன் சேர்த்துவிடும். மாத்தறையிலிருந்து வரும் ரயில் கொழும்பை அடைந்து தலைமன்னார் இறங்குதுறைக்குப் போகும் ரயிலுடன் சேர்த்துவிடும். காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்கு வரும் ரயில் மதவாச்சியில் இந்தியாவுக்குப் போகும் பயணிகளை தலைமன்னார் இறங்குதுறைக்குப் போகும் ரயிலுடன் சேர்த்துவிடும்.









## படகுச்சேவை

தலைமன்னார் இறங்குதுறையிலிருந்து இராமேஸ்வரம் செல்வதற்கான படகுச்சேவை செவ்வாய், புதன் வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்றது. காலை 10 மணிக்குப் புறப்பட்டு பகல் 1.30 மணி அளவில் இராமேஸ்வரம் சென்றடையும் அந்தப் படகு இராமேஸ்வரம் துறைமுகத்திலிருந்து திங்கள் அல்லது வியாழக்கிழமைகளில் பகல் 2 மணிக்குப் புறப்பட்டு மாலை 5.30 மணியளவில் தலைமன்னார் இறங்குதுறையை வந்தடையும். இப்படகு இருதட்டுக்கள் உள்ளதாக இருந்தது. மேல் தட்டுக்கான கட்டணம் 47 ரூபா 85 சதமாகவும் கீழ் தட்டுக்கான கட்டணம் 28 ரூபா 5 சதமாகவும் இருந்தன. 1970 ஆம் ஆண்டுகளில் இச்சேவை நிறுத்தப்பட்டது. இதனால், இந்தியாவுடனான தொடர்பு மிக மிகக் குறைந்தது. இச்சேவைகளினால் அன்று அதிகளவானோர் மிகுந்த பயன்களைப் பெற்றுக்கொண்டிருந்தனர்.

மீண்டும் இதை நடைமுறைப்படுத்த வேண்டும் எனும் ஆவல் இரு நாடுகளுக்கிடையிலும் ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில், இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் பூர்விக காலந்தொட்டே தொடர்புகள் இருந்து வருகின்றது. இலங்கையிலுள்ள பௌத்த மக்களுக்கு புத்தகயாவே புனிதத் தலமாகும். ஏழை எளிய பௌத்த மக்களுக்கு அதை ஒருமுறையேனும் தரிசிக்கவேண்டும் எனும் ஆவல் இருக்கிறது. அதற்கும் குறைந்த செலவில் சென்று வரும் வாய்ப்பையே அவர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள். அதுபோல் இலங்கைத் தமிழர்களுக்கும் மத, இன, மொழி, சமூக உறவுள்ள தமிழக மக்களுடன் வம்ச உறவு இருக்கிறது. அதுபோல் இலங்கை முஸ்லிம்களுக்கும் தமிழக முஸ்லிம்களுடன் நெருங்கிய சன்மார்க்க உறவு இருக்கிறது.

## மீண்டும் எதிர்பார்ப்பு

எனவே, வசதிக் குறைவு பயண வாய்ப்புக்குத் தடையாக இருப்பதால் குறைந்த கட்டணத்தில் சௌகரியமாகப் பயணிப்பதையே அனைவரும் விரும்பினர். இந்திய இலங்கை இணைந்த ரயில் சேவை நடைபெற்ற காலத்தில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து அதிவேக ரயிலான யாழ்தேவி அதிகாலை 5.45 மணியளவில் யாழ்ப்பாணத்துக்கும் காங்கேசன் துறைக்கும் புறப்படும். இது ராகம, கம்பஹா, வியாங்கொடை, பொல்கஹாவெல, அலவ்வ, குருணாகல, மஹவ, கல்கமுவதலாவ, அநுராதபுரம், மதவாச்சி, பூனேவ, வவுனியா ஆகிய ரயில் நிலையங்களில் மட்டுமே நிறுத்தப்படும். மதவாச்சியில் இந்தியப் பயணிகள் இறங்கிக்கொள்வர். வவுனியாவுக்குப் பின்னர் காங்கேசன்துறை வரை அனைத்து ரயில் நிலையங்களிலும் யாழ்தேவி நிறுத்தப்படும். இன்றைய இளம் சமூகத்தினருக்கு இந்த விபரங்கள் தெரிந்திருக்கவேண்டியது அவசியமானதாகும்.

**ஏ.ஜே.எம்.நிழாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்துடன் மலேசியாவுக்குச் செல்ல என்னை சரியாக வர்ணந்தீட்டுங்கள்..!




**இப்போது எனது காற்சட்டை நீல நிறம். ஷேர்ட் சிவப்பு நிறம். முதலிரண்டு மாத சீட்டிழுப்புகளுக்கும் கூப்பன்கள் கையளிக்கும் காலம் இத்துடன் நிறைவு பெற்றுவிட்டது. எஞ்சியுள்ள பகுதிகளை சரியான முறையில் வர்ணந்தீட்டி விரைவாக அனுப்பி வைத்து நீங்களும் வெற்றியாளர்களாகுங்கள்.**

Homerun PAS COLOUR ME COMPETITION

இன்றே நீங்களும் ஹோம்ரன் பஸ் Colour Me போட்டியில் பங்குபற்றி, ஹோம்ரன் பெஸ் பக்கட்டினுள் இருக்கும் **ஹோம்ரன் சாம்பை** வர்ணந்தீட்டி அனுப்பி வைத்து பெறுமதியான பரிசுகளை வெல்லுங்கள். நீங்கள் வர்ணந்தீட்டிய ஹோம்ரன் சாம்பின் நிறம், இலங்கங்களிடப்பட்ட எமது சாம்பின் பகுதிகளுடன் பொருந்தினால் ஹோம்ரன் பெஸ் மூலமாக கைநிறையப் பரிசுகள்.

## மாபெரும் இறுதிப் போட்டி

சகல பிரிவுகளிலும் எமது சித்திரத்தை ஒத்ததாக வர்ணம் தீட்டி அனுப்பும் உங்களுக்கு, இறுதிச் சீட்டிழுப்பில் பங்குபற்றும் வாய்ப்பு கிடைக்கும். **ஒக்டோபர் 15 ஆந் திகதி முதல் ஜனவரி 15 ஆந் திகதி வரை** அனுப்பப்படும் சரியான சகல கூப்பன்களும் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும்.


மாபெரும் இறுதிச் சீட்டிழுப்பில் தெரிவுசெய்யப்படும் **முதலாவது வெற்றியாளர் குடும்பத்துடன் (தாய் மற்றும் தந்தை) மலேசியாவில் வோட்டர் வேர்ள்ட் சுற்றுலா** மேற்கொள்வார். மேலும் 10 வெற்றியாளர்களுக்கு **பைசிக்கிள்களும்** அத்துடன் **நான்கு பேருக்கு வரைதல் உபகரணங்களும்** இன்னும் **05 பேருக்கு MP3 பிளேயர்** மற்றும் **ஏனைய வெற்றியாளர்களுக்கு பெறுமதியான 400 ஆறுதல் பரிசுகளும்** வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் - தொலைபேசி இலக்கங்கள் 011 3 198080, 011 2 925658 அல்லது 0772 398671.

ஹோம்ரன் பெஸ் Colour Me வர்ணந்தீட்டும் போட்டி
வரையறுக்கப்பட்ட கலர் புரடக்ட்ஸ்,
இல. 437/4 த.பெ.இல. 10,
றாகம வீதி, கடவத்த



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



திம்பு நகரின் தென்பகுதி




# பூட்டான்

**அரசு:** ஒரு சட்ட சபைகொண்ட வரம்புடைய ஜனநாயக முடியாட்சி.

**அமைப்பு:** வேங்சுக் காலப்பகுதி-1907 ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் திகதி; ஜனநாயக முடியாட்சி நிறுவப்பட்டது-2008.

**தேசிய பெயர்:** Brug RGyal-khab Dru Gakhap - பூட்டான் ராச்சியம் (Kingdom of Bhutan)

**தேசிய விடுமுறை தினம்:** டிசம்பர் 17.

**ஆட்சியாளர்** (2004): அரசர் ஜிக்மி கேஸர் நம்கியல் வேங்சுகின்

**பிரதமர்** (2008): லியோன்போ ஜிக்மி தின்லி.

## புவியியல்

இமயமலைச் சரிவின் தென்கிழக்கில் பூட்டான் அமைந்துள்ளது. நாற்புறமும் நிலப்பகுதியால் சூழப்பட்ட ஒரு மத்திய ஆசிய நாடு. தெற்கில் இந்தியாவையும் வடக்கில் திபெத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. டங்மி, மங்டி, சென்கோஷ், டோர்சா என்பன பூட்டானில் பாயும் முக்கிய நதிகளாகும்.

## வரலாறு


கிச்சு லக்ஹாங்

'மொன்பா' என அழைக்கப்படும் பூட்டானின் பூர்வீகக்குடிகள், திபெத்தில் இருந்து இங்கு குடிபெயர்ந்து வந்ததாகவும், இது கி.மு. 2000 ஆம் ஆண்டளவில் ஆரம்பமாகியதாகவும் கருதப்படுகின்றது. அரச பதவி பரம்பரை வழிபட்டது. அதன் படி, 1907 முதல் 'வேங்சுக்' வம்சம் ஆண்டு வருகிறது. 1998 முதல் ஆட்சி முறை அரசியல் சட்டத்திற்கு உட்பட்டதாக்கப்பட்டது. டிசம்பர் 2004 இல் ஒரு புதிய அரசியல் சட்ட வரைவு வெளியிடப்பட்டது. மார்ச் 2005 இல் இரு கட்சி ஜனநாயகம் கொண்ட ஓர் அரசியல் சட்டவரைவு அறிவிக்கப்பட்டது. 2006 டிசம்பர் மாதம் இளவரசர் ஜிக்மி கேஸர் அரசரானார்.

**மொத்தப் பரப்பு:** 18,147 ச.மைல் (47,000 ச.கிலோமீற்றர்).

**உயர்ந்த சிகரம்:** குலா கம்கிரி-24783 அடி (7554 மீற்றர்).

**தாழ்ந்த மையம்:** ட்ராங்மி ச்சு - 318 அடி (97 மீற்றர்).

**நிலப்பிரிவுகள்:** 18 மாவட்டங்கள்.

**மொத்த சனத்தொகை** (2009): 691,141.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** திம்பு.

**நாணயம்:** நகுல்ட்ரம்.

**மொழிகள்:** டஸோங்கா (அரச கருமமொழி), நேபாளி, டிபெட்டன், குருங், அசாமி, ஆங்கிலம்.

**இனங்கள்:** பூட்டி 50%, நேபாளிகள் 35%, இடம் பெயர்ந்த திபெத்தியர் 15%.

**சமயங்கள்:** லமாயிஸ்டிக் பௌத்தம் 75%, இந்திய-நேபாளத் தொடர்பு இந்துக்கள் 25%.

**எழுத்தறிவு** (2003): 47%.

**தேசிய சின்னங்கள்:** **மலர்**-நீல பொப்பி, **மரம்**-பூட்டான் சைப்ரஸ், **மிருகம்**-Takin எனும் ஆடு, **பறவை**- Common Raven- எனும் காகம், **விளையாட்டு**-அம்பெய்தல்.

## தேசிய கீதம்

Druk tsenden koipi gyelkhap na
Pel loog nig tensi chongwai gyon
Druk ngadhak gyelpo rinpoche
Ku jurmey tenching chhap tsid pel
Chho sangye tenpa darshing gyel
Bang deykyed nyima shar warr sho
என்பதாகும்.


தேசிய இலச்சினை


திம்புவிலுள்ள தேசிய நூலகம்

## காலநிலை

பல்வேறு காலநிலை மாற்றங்கள் பூட்டானில் நிலவுகின்றன. இதற்குக் காரணம், நாட்டில் காணப்படும் உயர்ந்த மலைகளாகும். நாட்டின் வடபகுதியின் உயர் மலைச்சரிவுகளில் அதிகுளிர் காலநிலையின் போது பனிக்கட்டி வீழ்ச்சி காணப்படுகின்றது. கோடைகாலத்தில் பருவக்காற்றுக்களின் செல்வாக்கும் ஓரளவு காணப்படுகின்றது. கோடைகாலத்தில் வெப்ப நிலை 85°F வரை உயர்வடையும்.


விளைநிலங்கள்

## கலாசாரம்

தெற்கில் அமைந்துள்ள இந்தியாவினதும் வடக்கில் அமைந்துள்ள சீனாவினதும் கலாசார, பொருளாதாரத் தாக்கங்கள் பூட்டானில் சிறிதளவு காணப்படுகின்றன. 20 ஆம் நூற்றாண்டிலேயே வெளி நாட்டவர்கள் நாட்டினுள் வர அனுமதிக்கப்பட்டார்கள். நவீன பூட்டானிய கலாசாரம் மிகப் புராதன பூட்டானிய கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்:** பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள் (2003): 25200; **செல்லிடத் தொலைபேசி:** 22000.
**வானொலி நிலையங்கள்** (2004): FM 1 SW 1.
**தொலைக்காட்சி நிலையங்கள்** (2005): 1. **இணையத்தள வழங்குனர்** (2003): 985; **இணையத்தளப் பாவனையாளர்:** 15000.


புனாகா பகுதி

## போக்குவரத்து

**பெருந்தெருக்கள்:** 4007 கி.மீ.
**துறையும் துறைமுகமும்:** இல்லை. **விமான நிலையங்கள்** (2004): 2.






## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச் செய்கைக்குரிய நிலம் 3%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** நெல், சோளம், உட்பட தானிய வகைகள், பாற்பண்ணைத் தொழில், முட்டைகள். **தொழிலாளர் தொகை:** விவசாயம் 93%, கைத்தொழிலும் வர்த்தகமும் 2%, சேவைகள் 5%. **வேலையற்றோர் தொகை** (2004): 2.5%. **கைத்தொழில்கள்:** சீமெந்து, மரத்தளபாடங்கள், பழ உற்பத்திகள், கல்சியம் கார்பைட், பான வகைகள். **இயற்கை வளங்கள்:** உயர்ரக மரங்கள், ஹைட்ரோபவர், ஜிப்சம், கல்சியம் கார்பைட். **ஏற்றுமதிகள்** (2000): மின்சாரம், ஜிப்சம், ஏலக்காய், மரவகைகள், கைப்பணிப் பொருட்கள், சீமெந்து, பழவகைகள், விலைமதிப்புள்ள கற்கள், வாசனைத் திரவியங்கள். **இறக்குமதிகள்:** எண்ணெய்யும் எரிபொருட்களும், தானியங்கள், இயந்திரங்களும் இயந்திர உதிரிப்பாகங்களும், வாகனங்கள், அரிசி. **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): இந்தியா, பங்களாதேஷ், ஜப்பான், ஜேர்மனி, ஒஸ்ட்ரியா.



## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

- **பாரோ** (மிகவும் அபிவிருத்தி அடைந்த பூட்டானிய நகரம்)
- **புனாக்கா** (அழகிய கிழக்கு இமய மலைத்தொடர்)
- **தேசிய அரும்பொருட்காட்சியகம்.**
- **ஜிக்மி டோர்ஜி தேசிய பூங்கா.**
- **குர்ஜி லக்ஹாங்** (வரலாற்றுக் கோயில்).
- **சிம்மி லக்ஹாங்** (மிஸ்டிக்கல் கோயில்).
- **கிச்சு லக்ஹாங்.**
- **டக்ஸ்டாங் லக்ஹாங்** (பௌத்த யாத்திரைத் தலம்)
- **கைவினைக் காட்சியகம்.**
- **பண்ணை வீடு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்தும் கணிப்பீடு சார்ந்த வினாக்கள் உள்ளடங்கிய மாதிரிப் பரீட்சை இல-02

## வினாத்தாள் I

பெயர்: .................................................... நேரம்: 45 நிமிடங்கள்

*1 தொடக்கம் 36 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றில் சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.*

★ **கீழே இரண்டு படங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றினை நன்கு அவதானித்து, சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

(01) 
(1) மின்சாரம் - சுழலும் - காற்று
(2) மின்சாரம் - காற்று - வெளிச்சம்
(3) இயற்கை - சுழலும் - காற்று

(02) 
(1) விளையாட்டு - எரிபொருள் தேவை - உடற்பயிற்சி
(2) எளிய பராமரிப்பு - எரிபொருள் இன்மை - உடற்பயிற்சி
(3) விளையாட்டு - உடற்பயிற்சி - எரிபொருள் தேவை

★ **தரப்பட்டுள்ள நான்கு படங்களுள் இரண்டு ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. அவற்றைக் குறிக்கும் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

(03) 

(1) AB (2) BC (3) AD

(04) 

(1) AC (2) BD (3) AB

★ **5 ஆம் 6 ஆம் வினாக்களில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**

(05) தண்ணீர்: பனிக்கட்டி போல, பால்: ............ (1) மோர் (2) தயிர் (3) நெய்

(06) பசு: பால் போல, கோழி: ................ (1) இறைச்சி (2) கொக்கரிக்கும் (3) முட்டை

★ **முதலாவது சொல் முடிந்ததும் இரண்டாவது சொல்லை ஆரம்பிக்கும் சொல்லை இனங்கண்டு, அதன் கீழ்க் கோடிடுக.**

உதாரணம்: முச் (.........) (1) சிப்பி (2) சப்பு (3) சந்தி

(07) அரு (.......) தானம் (1) மை (2) கை (3) தை

(08) விகட (.......) யரசு (1) வதி (2) மதி (3) கவி

★ **பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளுள் மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**

(09) பறவைகளுக்கு மாத்திரம் இறகுகள் உள்ளன. எனவே, பின்வருவனவற்றில் எது சரியானது?
(1) பறவைகள் வசந்தத்தில் இறகுகளை உதிர்க்கின்றன.
(2) எல்லாச் சிறகுகளும் இலேசானவை.
(3) பாம்புகளுக்கு இறகுகள் இல்லை.

(10) சிங்கங்களுக்குப் பிடரி மயிர் உண்டு. பெண்களும் நீண்ட தலைமயிர் வளர்ப்பர். எனவே,
(1) ஆண்களுக்கு நீண்ட தலைமயிர் இல்லை.
(2) பிடரி மயிர் இருப்பவர் பெண்கள்.
(3) பெண்களில் சிலர் நீண்ட தலைமயிர் வளர்ப்பர்.

★ **பின்வரும் சோடி எழுத்துக்கள் ஏதோ ஒருவகையில் இணைகின்றன. விடுபட்ட இடத்துக்குரிய சரியான எழுத்துக்களைத் தெரிவு செய்து,அதன் கீழ்க் கோடிடுக.**

(11) ZA:YB , XC : ................ (1) OP (2) BC (3) WD

(12) ABC: ZYX , DEF: ................ (1) WVU (2)VUT (3) TSR

(13) பின்வரும் உருவில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.







(14) பிழையாக இலக்கமிடப்பட்டுள்ள புத்தகம் எது?




(15) சரியாக வரையப்பட்ட உருவை இனங்கண்டு, அதன் கீழ்க் கோடிடுக.





★ ***16 ஆம் 17 ஆம் வினாக்களில் உள்ள சொல் வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம்பெறும் சொல் வரிசையின் கீழ்க் கோடிடுக.***

(16) (1) மேசை, அலுமாரி, கட்டில், கதிரை
(2) வெண்டி, கத்தரி, லீக்ஸ், தக்காளி
(3) கிளி, புறா, பறவை, மைனா

(17) (1) ஹொக்கி, கிரிக்கெட், கரப்பந்தாட்டம், காற்பந்தாட்டம்
(2) நெற்கதிர், தர்மசக்கரம், வாளேந்திய சிங்கம், அரச இலச்சினை
(3) உடுக்கு, தபேலா, தம்பட்டம், முரசு.


(18) அருகில் தரப்பட்டுள்ள பிரசினங்களை விளக்கி, சரியான விடையின் கீழ்க் கோடிடுக.




உரு ✡ இன் பெறுமானம் யாது?

(1) 4 (2) 6 (3) 24

(19) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு உருவுக்கும் குறித்த பெறுமானம் வழங்கப்பட்டுள்ளது. '?' குறியினால் காட்டப்படும் இடத்தில் வரவேண்டிய எண்ணை இனங்கண்டு, சரியான விடையின் கீழ்க் கோடிடுக.




(1) 13 (2) 14 (3) 15

(20) விளையாட்டுப்போட்டி ஒன்றில் நீலம், சிவப்பு, பச்சை ஆகிய கொடிகள் மைதானத்தில் இதே ஒழுங்கில் நடப்பட்டுள்ளன. 25 ஆவதாக நடப்பட்ட கொடியை தெரிவு செய்க.

(1) நீலம் (2) பச்சை (3) சிவப்பு

(21) ஒரு சதுர வடிவான காணியைச் சுற்றி வேலி அடைப்பதற்கு ஒரு பக்கத்திற்கு 20 வேலிக்கட்டைகள் தேவை. அக்காணியைச் சுற்றி வேலி அடைப்பதற்கு எத்தனை வேலிக்கட்டைகள் தேவை?

(1) 80 (2) 76 (3) 84

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

### மாதிரி வினாத்தாளுக்கான விடைகள்

*(டிசம்பர் 09, 16 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

| | | | |
|---|---|---|---|
| (01) 2 | (11) 3 | (21) 2 | (31) 3 |
| (02) 2 | (12) 3 | (22) 2 | (32) 2 |
| (03) 2 | (13) 1 | (23) 3 | (33) 3 |
| (04) 3 | (14) 1 | (24) 2 | (34) 3 |
| (05) 2 | (15) 2 | (25) 3 | (35) 2 |
| (06) 2 | (16) 2 | (26) 3 | (36) 7 |
| (07) 3 | (17) 3 | (27) 2 | (37) 8 |
| (08) 3 | (18) 3 | (28) 2 | (38) 4 |
| (09) 3 | (19) 3 | (29) 2 | (39) இன்சொல் பேசுவோம் |
| (10) 2 | (20) 2 | (30) 2 | (40) முதியோருக்கு உதவுவோம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**1815 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் திகதி கண்டியில் கைச்சாத்திடப்பட்ட மலையக ஒப்பந்தத்துடன் கண்டி ராசதானி (மலையக ராச்சியம்) ஆங்கிலேயரின் கைகளுக்கு மாறியது. இந்த ஒப்பந்தத்துடன் அதுவரை இருந்த சுதேசிகளுக்குரிய ஆதிபத்தியமும் சுதந்திரமும் சிதைந்தது**

# பிரித்தானியர்

இலங்கை பிரித்தானிய ஏகாதிபத்தி யத்தின் காலனித்துவ நாடாக 162 ஆண்டுகள் அடிமைப்பட்டுக் கிடந்தது. இக்காலகட்டத்தில் இலங்கையின் பொரு ளாதார, சமூக, கலாசாரம் உள்ளிட்ட சகல துறைகளிலும் பாரிய தாக்கங்கள் ஏற்பட் டன. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கை வாழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் ஏராளம். எனினும், இக்கால கட்டத்தில் இலங்கையில் சமூக, பொருளா தாரத்தில் பாரியளவு மாற்றங்கள் ஏற்பட்ட மையும் மறுக்கமுடியாததே. அது குறித்த விரிவான விபரங்களை இங்கு ஆராய்வோம்.

## பெருந்தோட்டத்துறையின் ஆரம்பமும் வளர்ச்சியும்

பிரித்தானிய ஆட்சியின் ஆரம்பகாலத்தில் கறுவாப் பயிர்ச்செய்கையே முக்கிய இடத்தை வகித்தது. எனினும், அக்காலத்தில் லண்டன் வர்த்தக சந்தையில் கறுவாவின் விலை மிக விரைவாகக் குறைந்துகொண்டே வந்தது. அதனால்,வேறு பல வர்த்தகப் பயிர்ச்செய்கைகள் குறித்து பிரித்தானியர் பல்வேறு பரீட்சார்த்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அதன் போது மத்திய மலைநாட்டுப் பிரதேசம் கோப்பிப் பயிர்ச்செய்கைக்கு மிகவும் உகந்ததாகக் கருதப் பட்டது. அதன்படி, 1824 இல் ஆளுநராகப் பதவியேற்ற எட்வர்ட் பாண்ஸ் என்பவர் கோப்பிப் பயிர்ச்செய்கையின் அபிவிருத்திக்குப் பெரும் சேவையாற்றினார்.

அவர், கோப்பித் தோட்ட உரிமையாளர் களுக்கு ஏற்றுமதி-இறக்குமதி வசதிகளை செய்து கொடுத்தார். அத்துடன், பயிர்ச்செய்கைக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளையும் பெற்றுக் கொடுத்தார். தவிர,

வரிச்சலுகைகளையும் வழங்கினார். கடன் வசதிகளையும் செய்துகொடுத்தார். இத்தகைய அரிய சேவைகளினால் இலங்கையில் கோப்பிப் பயிர்ச்செய்கையானது பல இடங்களுக்கும் வியாபித்தது. அதனுடன், 1835 ஆம் ஆண்டள வில் கோப்பிப் பயிர்ச்செய்கையின் வளர்ச்சி உச்சநிலையை அடைந்ததோடு, ஏற்றுமதியில் முக்கிய இடத்தையும் வகித்தது. எனினும், 1868 இல் இப்பயிர்ச்செய்கையில் துரதிர்ஷ்டமாக வீழ்ச்சி ஏற்படத்தொடங்கியது.

கோப்பி இலைகளில் ஏற்பட்ட ஒருவித தொற்றுநோய் காரணமாகவே இவ்வாறு கோப்பிப் பயிர்ச்செய்கை சீர்குலையத் தொடங்கியது. இதனால், அரசுக்குக் கிடைத்த பெருந்தொகை வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டது. இதனை அடுத்து சிங்கோனா மற்றும் கொக்கோ பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அவை வெற்றியளிக்கவில்லை. ஈற்றில் தேயிலை மலைநாட்டுப் பிரதேசத்திற்கு உகந்த பயிர் என அடையாளம் காணப்பட்டது. அதன்படி, 1867 இல் ஜேம்ஸ் டெய்லர் அவர்க ளால் முதன்முதலாக லூல்கந்துர தோட்டத்தில் தேயிலைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட துடன், அது மலையகம் முழுவதும் பரவியது. அத்துடன், இங்கிலாந்தின் வர்த்தக சந்தையில் தேயிலைக்கான கேள்வி அதிகரித்து, விலை உயர்வடைந்தது. இதனால், 1890 இல் இலங்கைக்கு தேயிலை ஏற்றுமதியால் கிடைத்த வருமானம் நாட்டின் ஏனைய வருமானங்களை யும்விட முதன்மை இடத்தை வகித்தது. இவ்வாறு படிப்படியாக வளர்ச்சி அடைந்த தேயிலைப் பயிர்ச்செய்கை வெற்றிகரமான பெருந்தோட்டப் பயிராக இன்றுவரை நீடித்து நிலைக்கின்றது.

## தேயிலைப் பயிர்ச்செய்கையினால் ஏற்பட்ட நவீன மாற்றங்கள்

- உழைப்பாளிகளாக இந்நாட்டுக்கு வருகை தந்த தென்இந்திய தொழிலாளர்கள் பின்னர் நாட்டின் இனக்குழுக்களில் கணிசமான அளவினராக தாக்கத்தை ஏற்படுத்தியமை.
- அக்காலத்தில் உலக தேயிலைத் தேவையில் 25 சதவீதம் இலங்கையால் நிறைவு செய்யப்பட்டமை.
- 1925 இல் இலங்கையில் தேயிலை ஆராய்ச்சி மையம் நிறுவப்பட்டமை.
- இலங்கையில் வங்கி முறை ஆரம்பமாகியமை.
- தபால் மற்றும் தந்திச்சேவை ஆரம்பமாகி வளர்ச்சி அடைந்தமை.
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதிப் பொருளாதார முறைக்கு நாடு மாறியமை.
- மத்திய மலைநாட்டின் காடுகள் பெருமளவில் வெளிகளாக்கப்பட்டமை.
- இலங்கை சமூகத்தில் நிலவுடைமையுள்ள பெருந்தோட்ட உரிமையாளர்கள் எனும் மத்திய வகுப்பினர் உருவாகியமை.
- பெருந்தோட்ட முறையால் இலங்கையருக்கு நவீன உலகில் பிரவேசிப்பதற்கான வாய்ப்புக் கிடைத்தமை.

தேயிலையை அடுத்து, கி.பி 1877 இல் றப்பர் பயிர்ச்செய்கை இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. 1890 இல் அது வர்த்தகப் பயிராக மாறியது. ஐரோப்பாவில் ஏற்பட்ட மோட்டார் வாகன கைத்தொழில் வளர்ச்சியினால் றப்பரின் தேவை மேலும் அதிகரித்தது. களுத்துறை மாவட்டத்திலேயே முதன்முதலாக றப்பர் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன், நீண்டகாலமாக தென்னைப் பயிர்ச்செய்கையும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், 19 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியிலேயே அது பொருளாதாரப் பயிராக கவனத்தை ஈர்த்தது.



## போக்குவரத்து புகையிரதப் பாதை

1845 இல் புகையிரதப் பாதை அமைப்புத் தொடர்பாக முதன்முதலாக கலந்துரையாடப் பட்டது. அக்காலத்தில் கெமல் என்பவர் ஆளுந ராகக் கடமையாற்றினார். அப்பொழுது கோப்பிப் பயிர்ச்செய்கையினால் அதிக வருமா னத்தை ஈட்டக்கூடியதாக இருந்தது. எனினும், கோப்பியை கொழும்புத் துறைமுகத்திற்குக் கொண்டுசெல்ல போதுமான வண்டிகள் இருக்க வில்லை. அதன்போதுதான் துரித போக்குவரத் துச் சேவையான புகையிரதப் போக்குவரத்தின் அவசியம் உணரப்பட்டது.


அதற்கேற்ப, 1856 இல் ஹென்றி வோட் ஆள்பதியின் காலத்தில் கொழும்பு-கண்டி



புகையிரதப் பாதை அமைப்புப் பணிகள் ஆரம்பமாகின. அதன் நீளம் 74 மைல்களாகும். தொடர்ந்து தேயிலை, றப்பர், தென்னை போன்ற பெருந்தோட்டப் பயிர்களின் அபிவிருத்தியோடு, இலங்கையின் பிரதான நகரங்களுக்கூடாக புகையிரதப் பாதைகள் அமைக்கப்பட்டன. இப்பாதை அமைப்புக்குத் தேவையான இரும்புக் குழாய்கள், இரும்புப் பாலம், இரும்புத் தகடு, இரும்பு ஆணிகள் என்பனவும் புகையிரதத்திற் குரிய இயந்திரங்கள், புகையிரதப் பெட்டிகள் என அனைத்தும் பிரித்தானியாவில் இருந்தே கொண்டுவரப்பட்டன.

## பெருந்தெருக்கள்

1815 வரை இலங்கையின் கரையோரப் பிரதேசங் களில் மாத்திரமே பெருந்தெருக்கள் அமைக்கப்பட்டன. அதற்கு முற்பட்ட ஒல்லாந்தர் மற்றும் போர்த்துக்கேயர் காலங்களில் பெருந் தெருக்கள் அபிவிருத்தி நடவடிக்கைகள் பெருமளவில் மேற் கொள்ளப்பட்டிருக்க



வயலில் உழும்

வில்லை
பெருந்
எட்வர்
அவரத
கொழு
அவரா
மொத்
அத
டன் (1
யான
பெருந்
அதன்

யாழ்ப்
மற்றும்
பதுளை
அம்பா
கொழு
இணை
1837
பெருந்
பணிக

193
காலத்
புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சிக்காலத்தில் இலங்கை



வில்லை. அதன்படி, இலங்கையில் ஏனைய பெருந்தெருக்களை அமைத்த பெருமை எட்வர்ட் பாண்ஸ் ஆள்பதியையே சாரும். அவரது காலத்தில் 72 மைல்கள் நீளமான கொழும்பு-கண்டி பெருந்தெரு அமைக்கப்பட்டது. அவரால் அமைக்கப்பட்ட பெருந்தெருக்களின் மொத்த நீளம் 300 மைல்களாகும்.

அதன்பின், ஆள்பதியாகிய வில்மன் ஹோர்ட்டன் (1831-1837) முழு இலங்கைக்கும் தேவையான முக்கிய பிரதேசங்களை இணைக்கும் பெருந்தெருக்களை அமைத்தார். அதன்படி, வடக்கில்



யாழ்ப்பாணம், கிழக்கில் திருகோணமலை மற்றும் மலைநாட்டில் கண்டி; நுவரெலியா; பதுளை மற்றும் தெற்கில் காலி; மாத்தறை; அம்பாந்தோட்டை ஆகிய நகரங்களுடன் கொழும்பு மாநகரமும் பெருந்தெருக்களால் இணைக்கப்பட்டது. இலங்கை வரலாற்றில் 1837 முதல் 1930 வரையிலான காலகட்டம் பெருந்தெருக்கள் எனும் வீதி அமைப்புப் பணிகள் நடந்த யுகமாக கருதப்படுகின்றது.

## கைத்தொழில்

1939 இல் ஏற்பட்ட இரண்டாம் உலக யுத்த காலத்தில் இலங்கை கைத்தொழில்துறையில் புதிய அத்தியாயத்தில் காலடி எடுத்து வைத்தது. கொம்பனித்தெருவில் பொதுக் கைத்தொழிற்சாலை, நீர்கொழும்பு பீங்கான் கைத்தொழிற்சாலை, மட்டக்குளி தோல் பதனிடும் தொழிற்சாலை, கிந்தோட்டை ஒட்டுப்பலகை கைத்தொழிற்சாலை, நாத்தாண்டியா கண்ணாடிக் கைத்தொழிற்சாலை, வாழைச்சேனை காகிதக் கைத்தொழிற்சாலை என்பன அவற்றில் குறிப்பிடத்தக்கன.

## கல்வி

இலங்கையின் முதலாவது பிரித்தானிய ஆள்பதியாகிய பிரட்ரிக் நோர்த் கல்வி குறித்து சில நடவடிக்கைகளை மேற்கொண்டார். அக்காலத்தில் நடைமுறையில் இருந்த 'பெரிஷ்' பாடசாலைக் கல்வி முறையை (ஒல்லாந்தரால் ஏற்படுத்தப்பட்டது) அவர் புனரமைத்தார். நோர்த் ஆள்பதியால் பறங்கியர்கள், முதலியார்கள், சுதேசிகளின் பிள்ளைகளுக்கென்று அவரவர்களுக்குப் பொருந்தும் வகையில் பாடசாலைகள் நிறுவப்பட்டன. அவை இருவகைப்படுகின்றன.

* எகடமி அல்லது செமினரி
* ஆரம்பப் பாடசாலைகள் என்பன.

இவருக்குப் பின்னர் ரொபர்ட் பிரௌன்றிக் காலத்தில் அவரால் இலங்கையின் கல்வி அபிவிருத்திக்குப் பெரும் பங்களிப்புகள் செலுத்தப்பட்டன. அதாவது,

* பாடசாலை திருத்த வேலைகள்.
* பெல்கே முறை அமுல்படுத்தல் (திறமையான மாணவர்களைப் பயன்படுத்தி ஏனைய மாணவர்களுக்குக் கற்பித்தல்)
* சுதேச மாணவர்களின் தொகையை அதிகரிக்கச் செய்தமை.
* வெளியூரில் உள்ள திறமையான மாணவர்களை இனங்கண்டு, கொழும்பு எகடமியில் சேர்த்து ஆங்கிலக் கல்வி வழங்கல் என்பன குறிப்பித்தக்கவை.

இக்காலத்தில் பாடசாலைகள் மூன்று வகையாக இருந்தன.

* அரச பாடசாலைகள்.
* மிஷனரி பாடசாலைகள்.
* தனியார் பாடசாலைகள்.

அத்துடன், கோல்புறூக் ஆணைக்குழுவின் கல்வி அபிவிருத்திக்குப் பல ஆலோசனைகளை முன்வைத்தனர். அரச பாடசாலைகளில் உள்ள குறைபாடுகளை இனங்கண்டு அதற்குத் தீர்வு கண்டனர். ஆங்கில மொழி கட்டாயமாக்கப்பட்டது. பாடசாலை ஆணைக்குழு ஒன்றை நியமித்தனர். இவ் ஆணைக்குழு மூலம் நாடு பூராவும் உள்ள அரச பாடசாலைகளை நிர்வகித்தனர். வினைத்திறன்மிகு பாடசாலைகள் உருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தவிர, கேர்னல் ஸ்டீல் ஒல்கட் அவர்களால் 'பரம வித்யார்த்த' நிறுவனம் அமைக்கப்பட்டு, பல பௌத்த பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதில், கொழும்பு ஆனந்தாக் கல்லூரி, கண்டி தர்மராஜ கல்லூரி, காலி மகிந்த கல்லூரி, மாத்தளை விஜய வித்தியாலயம் என்பன குறிப்பிடத்தக்கன. இதன்மூலம் உயர் குடும்ப பௌத்த பிள்ளைகள் கிறிஸ்தவ சமயத்திற்கு மாறுவது குறைவடைந்தது. பின்னர், அநகாரிக தர்மபால பௌத்த பாடசாலைகளுக்குப் புத்துயிர் வழங்கினார்.


## நீதி பரிபாலனம்

1815 இல் முழு இலங்கையும் ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ் வந்ததையடுத்து, புதிதாக நீதிச்சட்டம் அமுல்படுத்தும்வரை, ஏற்கனவே நடைமுறையில் இருந்த சட்டத்தையே அமுல்படுத்துவதென ஆங்கிலேயர் தீர்மானித்தனர். அதனால், தமிழ் நீதிச்சட்டம், இஸ்லாமிய சட்டம், சிங்கள நீதிச்சட்டத்துடன் ரோமானிய டச்சுச் சட்டமும் அமுலில் இருந்தன.

பின்னர் ஆங்கிலேயர் ஆட்சியின்போது ஆங்கில நீதிச்சட்டங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தின. நீதிமன்றத் தீர்ப்புகளிலும் ஆங்கிலச்சட்டம் தலைதூக்கியது. அதன்பின் ரோமானிய-டச்சு சட்டங்களுடன் ஆங்கில நீதிச்சட்டமும் முக்கிய இடத்தை வகித்தது.



வயலில் உழும் விவசாயி



பதுளை-கொழும்பு ரெயில் போக்குவரத்து



தேயிலைக் கொழுந்து உலர்த்துதல்



கறுவாப்பட்டை சீவும் கிராமத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபத்தையும் பயனுள்ளதாக்கலாம்



கோபம் ஒரு மனித உணர்வு. கோபத்தை நன்மை செய்யும் வகையில் பயன்படுத்துவதில்தான் நமது திறமை தங்கியுள்ளது. 'கோபம் கத்தியைப் போன்றது. கத்தி பழத்தையும் நறுக்கும், கழுத்தையும் அறுக்கும்'. பயன்படுத்துவோரின் தன்மையைப் பொறுத்து அது செய்யும் வேலை மாறுபடும்.

கோபம் வந்தவுடன் சில முறைகளைக் கையாள்வதற்குத் தயாராக வேண்டும். குறிப்பாக, எமது கவனத்தை புதியதோர் திசையில் திருப்பிக்கொள்ள வேண்டும். இவ்வாறு சிறிது நேரம் கழிந்ததும் குறித்த கோபத்திலிருந்து விடுவித்துக் கொண்டு மூன்றாவது நபராக நின்று அதனை உற்றுநோக்க வேண்டும்.

இதன் பின்னர் வழக்கமாக எந்த வேலையைச் செய்யும்போது ஒரு மகிழ்வு ஏற்படுமோ அதைச் செய்யலாம். நம் வாழ்வில் உண்மையான நண்பர் என்று நாம் கருதும் ஒருவருடன் போய் பேசலாம். ஓரளவு உணர்வுகளை வடியவிட்ட பின்னர் அமர்ந்திருந்து கோபம் ஊட்டிய அந்த விடயத்தைப் பற்றி ஏதோ ஒரு வடிவத்தில் எழுதலாம். அது கவிதையாக, சிறுகதையாக, நாவலாக, நாடகமாக அல்லது ஓவியமாக இருந்தால் மிகவும் சிறப்பானது. அவ்வாறு ஒரு சிறந்த கலை வடிவம் உருவாக்கப் படுமாயின், கோபம் பயனுள்ள முறையில் பயன்பட்டுவிட்டது எனலாம்.

யாருடன் எமக்குக் கோபம் ஏற்பட்டதோ, அவரை மன்னித்து விடுவதே கோபத்தைக் கையாளச் சிறந்த வழிமுறையாகும்.

மனதில் அமைதியும் மகிழ்வும் ஏற்பட வேண்டிப் பிரார்த்திப்போம். மிகவும் பிடித்தமான சமய நூலைப் படிப்போம்,யாருடன் கோபம் ஏற்பட்டதோ, அவருடைய நன்மைக்காக இறைவனைப் பிரார்த்திப்போம். இதனால், ஏற்படும் அமைதி நம் மனதுக்குத் தெளிவை ஏற்படுத்தும்.

முஹம்மட் லாபிர் லஸ்னா,
அஷ்-ஷிராஜ் ம.வித்.,
அக்கரைப்பற்று-01.

**தகவல் களஞ்சியம்**

* 'கறுப்பு அழகி ' என்று புகழப்பட்ட எகிப்திய அழகி கிளியோபட்ரா.
* இடிதாங்கியைக் கண்டுபிடித்தவர் பெஞ்சமின் பிராங்க்ளின்.
* இந்தியாவில் முதன்முதலாக விமானம் ஓட்டிய பெண் கேப்டன் துர்கா பானர்ஜி.
* ரோஜாவை தேசிய சின்னமாகக் கொண்ட நாடு பிரிட்டன்.
* பூட்டான் நாட்டின் நாடாளுமன்றத்தின் பெயர் 'சாங்டு'.
* புத்தரின் தந்தை பெயர் சுத்தோதனர்.

# அம்மா



*அம்மா! மாதா! தாய்! என்றும்
அன்னை என்றும் அழைப்போம் நாம்!*

*சும்மா அல்ல, எமைப் பெற்றுத்
தூக்கி வளர்த்த தெய்வம் நீ!*

*எம்மாம் சுகம்தான் உன்னாலே
நாங்கள் கண்டோம் தாய்ப்பாசம்!*

*நம்மால் உணர முடிகிறது
நாளும் துதிப்போம் வணங்கிடுவோம்!*

*பெற்றுப் பேணி ஆளாக்கிப்
பெருமை சேர்த்த தாய், தாய்தான்!*

*கற்றோர் தாய்தான் கண்கண்ட
கடவுள் என்பார்! போற்றிடுவார்!*

*தாய்ப் பாசம்தான் உலகினிலே
தழைத்தே ஓங்கச் செய்திடுவோம்!*

*சேய்ப் பாசம்தான் தாய்மார்கள்
தேடும் பாசம் இது உண்மை!*

# உங்களுக்குத் தெரியுமா?

## ராட்சத நீர் அல்லி



உலகில் மிகப்பெரிய தனி இலையுடைய தாவரம் 'ராட்சத நீர் அல்லி' ஆகும். (Giant Water Lily) இதன் இலை 2m நீளம் வரை வளரக்கூடியது. இலையின் மையத்திலிருந்து விரிந்து செல்லும் நார்களால் இலை வலிமையடைகின்றது. ஒரு குழந்தையை தாங்கக்கூடிய வலிமையை இந்த இலை கொண்டுள்ளது.

## நெப்பெந்தசு

விலங்குகளை உணவாக உட்கொள்ளும் தாவரங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நெப்பெந்தசு இதற்கு சிறந்த உதாரணமாகும். நெப்பெந்தசின் நிறத்தை நாடி வரும் பூச்சிகள் அதன் கெண்டியின் உள்ளே சென்றால் வெளியேற முடியாது. இறந்துவிடுகின்றன. இதன் பின்னர் பூச்சியின் உடலிலுள்ள போசணைப் பதார்த்தங்களை இத்தாவரம் உறிஞ்சிச் செழிப்பாக வளரும்.

## பெண்டா



சீனாவின் அடர்ந்த காடுகளில் வாழும் பெண்டா மூங்கில் மரங்களின் கிளைகளை மட்டுமே உணவாக உட்கொள்ளும் ஒரு விலங்காகும். இப்பெண்டாக்களின் திடீர் அதிகரிப்பால் அதிகமான பெண்டாக்கள் உணவின்றி மடிந்தன. இதனால், சீன அரசு நாடு முழுவதிலும் மூங்கில் மரங்களை நடுகின்ற திட்டமொன்றை ஆரம்பித்து அழிந்து போகும் பெண்டாக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

## சிங்கம்



காட்டு விலங்குகளில் அதிகளவு பட்டினியால் வாடுவது சிங்கமேயாகும். மான், மரை, முயல் போன்றவை இலையுண்ணிகள். அதனால் அவற்றுக்குத் தேவையான தாவரங்கள் காட்டில் தாராளமாக கிடைக்கின்றன. சிங்கம் ஊனுண்ணியாதலால் அதன் உணவுக்காக வேறோர் விலங்கை இரையாக்கிக் கொள்ளவேண்டும். இது எல்லா சந்தர்ப்பங்களிலும் இலகுவான விடயமல்ல.

தொகுப்பு: ஜே.கிறேன்ஸி,
புனித கெப்ரியல் ம.கல்., ஹட்டன்.

# பட்டால்தான் புத்தி வரும்



அந்தக் காட்டில் உள்ள மரங்கள், மிகவும் உயரமாக அடர்ந்து வளர்ந்திருந்தன. அங்கிருந்த குரங்குகள் எல்லாம் மரங்களின் ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்குத் தாவித் தாவி, விளையாடிக் கொண்டிருந்தன. அந்த வழியாக வந்த ஒரு முயல் குட்டி இதைப் பார்த்தது. அதற்கு, தானும் இதுபோன்று விளையாடினால், எவ்வளவு நன்றாக இருக்கும் என்று தோன்றியது. அப்போது, அந்த வழியாக வந்த இன்னொரு முயல், ''என்ன இங்கே நிற்கிறாய்?'' என்று முயல்குட்டியைப் பார்த்துக் கேட்டது.

''எனக்கும் குரங்கைப் போல் கிளைக்குக் கிளை தாவ ஆசையாக இருக்கிறது'' என்றது.

இது வீணான முயற்சி, இதுபோன்ற ஆசை நமக்கெல்லாம் வரக்கூடாது. அது அவைக்கே உரிய பண்பு. பிறரைப் பார்த்து இதுபோன்றே நாமும் நடக்கவேண்டும் என்று நினைப்பது தவறு. ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஆற்றல் இருக்கும். அதை அடையாளம் கண்டு, அதில் பயிற்சி பெற்றுச் செயல்படுவதுதான் நல்லது. எனவே, இந்த வீணான முயற்சி எல்லாம் வேண்டாம்'' என்று கூறிற்று.

இதைக் கேட்ட குட்டி முயல், ''நானும் இதுபோன்று மரத்தில் ஏறியே தீருவேன்'' என்று ஒரு மரத்தில் சர்ரென்று ஏறியது. மரத்தில் பாதித் தூரம் வரை ஏறிவிட்ட முயல் குட்டி, கீழே நின்ற முயலைப் பார்த்து, மகிழ்ச்சி மிகுதியால், ''இதோ நான் மரத்தில் ஏறிவிட்டேன். பாருங்கள்'' என்று உரக்கக் கூறியது. அந்த நேரத்தில் அதன் பிடி தளர்ந்துவிட்டதால், நேராக மரத்திலிருந்து, 'பொத்' என்று கீழே விழுந்தது. ''உனக்கெல்லாம் சொன்னால் புரியாது. பட்டால்தான் புத்தி வரும்'' என்று கூறிச் சென்றது பெரிய முயல்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மழைக்காலங்களிலேயே நாம் அதிகமாக ஈசல்களைக் காணக்கூடியதாக இருக்கும். பொதுவாக அவை இரவு நேரங்களில்

# பரிதாபத்திற்குரிய ஈசல்கள்





வீதியோர மின்விளக்குகளைச் சுற்றிக்கொண்டிருக்கும். இவற்றை ஓர் அற்பப்பிறவி என்றே சொல்லவேண்டும். ஏனெனில், அதன் ஆயுள் ஒரே நாள்தான். நுளம்புகளைப் போன்று அவை யாரையும் கடிக்கவோ, தொந்தரவோ செய்யாது. அவற்றால் உண்ணக்கூட முடியாது. ஏன் தெரியுமா? அவற்றிற்கு ஜீரண உறுப்பு இல்லை. உடல் ஒன்று, இறக்கைகள் இரண்டு. அவ்வளவுதான். இரவில் சுதந்திரமாக இவை பறந்து திரியும். காலையில் இறந்து கிடக்கும். இதுதான் ஈசலின் வாழ்க்கை.



அங்.இல: 3239

கே.நிதர்ஷன்,
தரம் - $6^{A}$,
முஸ்லிம் ம.வித்.,
அனுராதபுரம்.



அங்.இல: 3240

செ.ஜேசுதாசன் குடூஸ்,
தரம் - $3^{B}$,
புனித ஆனாஸ்
ம.ம.வித்., மன்னார்.



அங்.இல: 3241

எம்.ஜே.எம்.அரபாத்,
தரம் - 3,
தெஹி/நா.மு.ம.வித்.,
கேகாலை.



அங்.இல: 3242

எம்.என்.பிர்நாஸ்,
தரம் - $6^{B}$,
கழுகமுவ ம.கல்.,
கண்டி.



அங்.இல: 3243

இராசா நிரோஷன்,
தரம் - $9^{C}$,
புனித பத்திரிசியார் கல்.,
யாழ்ப்பாணம்.



அங்.இல: 3244

பாத்திமா அபிரா,
தரம் - $6^{I}$,
விஹாரமகாதேவி
ம.கல்., கண்டி.



அங்.இல: 3245

வ.ரம்லா,
தரம் - $5^{B}$,
அலிகார் மு.வித்.,
கல்எலிய.



அங்.இல: 3246

இஸட்.எம்.சப்ரி,
தரம் - $5^{B}$,
சாஹிரா தே.பாட.,
வறக்காமுறை.

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 3247

சு.அஜித் பிரசன்னா,
தரம் - $7^{C}$,
நோர்வூட் த.ம.வித்.,
நோர்வூட்.



அங்.இல: 3248

சு.துர்க்கா,
தரம் - $7^{C}$,
பூந்தோட்டம் ம.வித்.,
வவுனியா.



அங்.இல: 3249

கே.முஹம்மது லைஸ்,
தரம் - $9^{A}$,
அந்-நஜாத் ம.வித்.,
திருகோணமலை.



அங்.இல: 3250

வே.நிருபன்,
தரம் - $5^{C}$,
இராமநாதபுரம் ம.வித்.,
கிளிநொச்சி.



அங்.இல: 3251

ஏ.கோடீஸ்வரன்,
தரம் - 6,
சென்.ஜோன்ஸ் ம.வித்.,
கொழும்பு.



அங்.இல: 3252

எம்.முஸ்ஸம்மில்,
தரம் - 1,
ரஹ்மானிய்யாஹ்
அ.கல்., அகுறனை-06.



அங்.இல: 3253

நீ.கஜீனா,
தரம் - $11^{B}$,
பாத்திமா பாலிகா
ம.வித்., புத்தளம்.



அங்.இல: 3254

எம்.இல்ஹாம்,
தரம் - $2^{B}$,
ஸாஹிரா மு.வித்.,
மாத்தளை.



அங்.இல: 3255

எஸ்.மதுசூதனா,
உயர் தரம்,
றம்பைக்குளம் பெ.கல்.,
வவுனியா.



அங்.இல: 3256

எம்.பாஹிர்,
தரம் - 6,
தேசிய பாடசாலை,
அட்டாளைச்சேனை.



அங்.இல: 3257

தி.நிதீபன்,
தரம் - 11,
அச்சுவேலி ம.கல்.,
யாழ்ப்பாணம்.



அங்.இல: 3258

என்.எம்.தயாஸ்,
தரம் - 11,
அநு/உடநிதிகம மு.வித்.,
உடநிதிகம.

# வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' பரிசுகள்




இது, வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' உற்பத்தி கல்வி உபகரணங்களை பரிசுகளாக அள்ளித்தரும் 'வீரோதார-விஜய்' குறுக்கெழுத்துப்போட்டி. இவ்வார 'விஜய்'யை வாசிக்கும்போதே இந்த போட்டிக்கான அநேக விடைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கான பரிசுகளின் விபரம் வருமாறு;

★ **முதலாம் பரிசு**
ரூபா 3,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **இரண்டாம் பரிசு**
ரூபா 2,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **மூன்றாம் பரிசு**
ரூபா 1,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **10 ஆறுதல் பரிசுகள்**
ஒவ்வொருவருக்கும் ரூபா 500 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்.

விடைகளை நிரப்பி-கத்தரித்து-தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி 30.12.2009 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி;

**வீரோதார-விஜய்
குறுக்கெழுத்துப் போட்டி இல: 24
'விஜய்',
த.பெ.இல: 2037, கொழும்பு.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பா | ட | 2 சா | லை | | 3 ச |
| ன | | தி | | 4 நீ | தி |
| ம் | | | | | |
| | | 5 ப | | 6 லை | 7 அ |
| 8 ம | லே | ரி | யா | | ன் |
| ணி | | வு | | 9 யா | னை |

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 22 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

**முதலாம் பரிசு**
பூ.நிரோயினி,
1/49 B குளியாப்பிடிய வீதி,
நாரம்மல.

**இரண்டாம் பரிசு**
அ.ஜினிதா,
பாடசாலை வீதி,
சேனைக்குடியிருப்பு-1,
கல்முனை.

**மூன்றாம் பரிசு**
எம்.மனாஸ்,
45/C குருக்குட்டால,
கடுகண்ணாவ.

### ஆறுதல் பரிசுகள்

சீ.கிஷாந்தி,
18, மல்லாந்தை,
நாவலப்பிட்டி.

ஏ.ஆர்.எஃப்.எஃப்.
ரப்அத் ஆரா,
51, 3 ஆம் தெரு,
புத்தளம்.

தி.சிரோஷன்,
150/3, பீருதாவளை,
மாத்தளை.

எம.ஐ.எம்.நாஸிர்,
197/6A, ஐ.எல்.லேன்,
கலாபொக்க.

ஸ்ரீ.சாளினி,
344, வீரபுரம்,
நேரியகுளம்.

சல்கா யாஸின்,
129/3, துனுவில ரோட்,
அக்குறனை.

வி.தீபதர்ஷன்,
பிரிட்வெல் தோட்டம்,
பொகவந்தலாவ.

எச்.சல்மா,
B 117/3, கம்பளை வீதி,
ஹபுகஸ்தலாவ.

ஏ.சத்தியராஜ்,
114, ஹல்கொல்ல,
ஹபுகஸ்தலாவ.

ஏ.எல்.ரஸீம்,
ஆலிம் நகர்,
மூதூர்-02.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | கு | 3 | ள் |
| ள | | கை | | | |
| | | | | | |
| 4 | | | 5 | | 6 |
| | | | ன | | |
| 7 | ற் | | | | தி |

பெயர் : ..............................
வீட்டு முகவரி : ..............................
..............................
தொலைபேசி இல : ..............................
பாடசாலை : ..............................
அருகிலுள்ள நகரம் : ..............................
மாவட்டம் : ..............................

### மேலிருந்து கீழ்

1. ஒளி தருவது.
2. இளையவளை இப்படிக் கூறுவோம். (குழம்பி இருக்கிறது)
3. வயிற்றில் உள்ள பையில் குட்டியை வைத்திருக்கும் மிருகம்.
5. சூடு என்றும் சொல்லலாம்.
6. நோய் இதனைக் குறிக்கும்.

### இடமிருந்து வலம்

1. பெரும்பாலும் காடுகள்தான் இவற்றின் வாழ்விடம்.
4. ஆதி மனிதன் இங்கும் வசித்துள்ளான்.
5. நீர்வீழ்ச்சி என்றும் சொல்லலாம்.
7. [illegible]யைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

## பரிசுப் பொதியுடன் நத்தார் தாத்தா



எம்.ஏ.எஃப்.பர்ஸானா, தரம் - 9D, வெலம்பொட முஸ்லிம் ம.வி., வெலம்பொட.



சம்ஹா முனீர், தரம் - 9B, ஆமினா ம.தே.பாட., மாத்தளை.

## கிறிஸ்மஸ் மரம்



ஏ.டீ.எஃப்.ஃபஸ்ரினா, தரம் - 4, தல்துவை மு.ம.வித்., தல்துவை.



கோ.ஹாருசன், தரம் - 3, வரணி மகா வித்., யாழ்ப்பாணம்.

## பரிசுப் பொருட்கள்



எம்.எஃப்.ரினோசா, தரம் - 6B., ஹம்சா மு.ம.வித்தியாலயம்.



பி.எம்.ஸஹ்ரி, தரம் - 8B., பொலன்னறுவை மு.ம.கல்., பொலன்னறுவை.



சம்மாந்துறை, செந்நெல் கிராமத்தைச் சேர்ந்த சம்சார்-றசீனா தம்பதியரின் செல்வப் புதல்வி எஃப்.ஹன்பா இப்பத், 12.12.2009 அன்று தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



இறக்குவானையைச் சேர்ந்த நிஸ்பா-பதுருநிஸா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் ரிகாஸ், 15.12.2009 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் வாழ்த்துகின்றனர்.

(தகவல்: பரீஹா நிஸ்பா)



அநுராதபுரத்தைச் சேர்ந்த றஜ்மதுல்லா-றிஸ்மினா தம்பதியரின் செல்வப் புதல்வி ஃபாத்திமா ரஹ்னா, 20.12.2009 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை வாப்பம்மா குடும்பத்தினர் உட்பட உம்மம்மா குடும்பத்தினரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



கென்கல்லையைச் சேர்ந்த திவாகர்-சரோஜாதேவி தம்பதியரின் செல்வப் புதல்வி அஸ்வினி, 11.12.2009 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் இறைவன் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: கோகிலா)

## 'விழா உலா' குறித்து உங்கள் கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதியில் பிறந்தநாள் வாழ்த்துக்கள் உட்பட ஏனைய சாதனையாளர்கள், விழாக்கள் பற்றிய தகவல்கள் கட்டணமின்றியே பிரசுரிக்கப்படுகின்றன.

பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்பும்போது அதுகுறித்த, படம் மற்றும் தகவலை பிறந்தநாள் கொண்டாடப்படவுள்ள தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறும் சாதனையாளர்களின் படம் மற்றும் அதுகுறித்த தகவலை அனுப்பும்போது கட்டாயமாக குறித்த சாதனைகளுக்காக வழங்கப்பட்ட சான்றிதழின் நிழற் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.




கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



வி. டிசாந்தன், தரம் - 3, பரிகாரிகண்டல் அ.த.க.பாட., முருங்கன்.



மொஹமட் அக்ரம், ஜே.பி. ஒழுங்கை, புத்தளம்.



ஃபாத்திமா நுஸ்ஃபா, தரம் - 7C, சைவ மங்கையர் வித்., கொழும்பு - 06.



முஹம்மது இன்சாப், தரம் - 1, ஹமீதியா மு.ம.வி., கும்பலங்க.

## கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்



தயாளன் ஜனார்த், தரம் - 7B., சென்.ஜோன்ஸ் கல்., யாழ்ப்பாணம்.





கே. தீமோன்ராஜ், தரம் - 8, ஸ்பிரிங்வெளி த.வித., பதுளை.

## துடுப்பு மட்டையும் பந்தும்



பிரயன் செல்வநாயகம், தரம் - 2F, திரித்துவக் கல்லூரி, கண்டி.



எம்.எம்.எஃப்.ஃபர்ஹானா, தரம் - 5B, அல்-அஸ்ஹர் ம.கல்., தெஹியங்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'கெரோல்' கீதங்கள் உருவான விதம்

நத்தார் தினத்தையொட்டிப் பாடப்படுகின்ற 'கெரோல்' கீதங்கள் மிகவும் முக்கியத்துவம் மிக்கதாகும். 14 ஆம் நூற்றாண்டு காலத்தில் 'கெரோல்' கீதங்கள் உலகம் பூராவும் மிகவும் பிரபல்யம் அடைந்தது.

உலகெங்கிலும் அதிகளவு பிரபல்யத்தைப் பெற்ற கெரோல் கீதமாக கருதப்படுவது 'சைலன்ட் நைட்' (Silent Night) என்ற கெரோல் கீதமேயாகும்.

'சைலன்ட் நைட்' கெரோல் கீதமானது ஆஸ்திரியா நாட்டிலேயே அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இந்தப் பாடல் பல்வேறு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அத்துடன், 'ஹார்க் த ஹெரல்ட் ஏன்ஜல்ஸ் சீஸர்' மற்றும் 'டெஸ்ட் பீடெலிஸ்' ஆகிய கெரோல் கீதங்களும் கிறிஸ்தவ மக்கள் மத்தியில் மிகவும் பிரசித்தி பெற்ற பாடல்களாக உள்ளன. இந்த கெரோல் கீதங்கள் ஆங்கிலம், லத்தீன், ஜேர்மனி, பிரான்ஸ் என எந்தவொரு மொழியில் இடம்பெற்றாலும் மொழி புரியாதவர்கள்கூட ரசிக்கக்கூடிய வகையில் அமைந்திருப்பது கெரோல் கீதங்களின் சிறப்பம்சமாக அமைந்துள்ளது.

# சிறுவர்களை மகிழ்விக்கும் நத்தார் தாத்தா

நத்தார் தினத்தில் இளம்பிள்ளைகளைக் குதூகலிக்க வைக்கின்ற 'நத்தார் தாத்தா' ஒரு சிறப்பு விருந்தினர் என்றே கூறலாம். 'சென்டா க்ளோஸ்' என்று அழைக்கப்படுகின்ற நத்தார் தாத்தா துருக்கி நாட்டிலேயே முதன்முதலாக அறிமுகமானார். அந்நாட்டைச் சேர்ந்த ஆயர் நிக்கலஸ் நத்தார் தினத்தில் ஏழைக்குழந்தைகளுக்கு பரிசில்கள் வழங்குவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார். அந்தவகையில், தன் வாழ்நாள் முழுவதும் தனது சொத்துக்கள் முடியும்வரை இவ்வாறு பரிசில்களை வழங்கிவந்த அவர் கி.பி 341 இல் டிசம்பர் 6 ஆம் திகதியன்று உயிர் நீத்தார். ஆனால், அவரது இந்தப் பணிகள் அத்துடன் முடியவில்லை. ஏனையோரும் அதனைப் பின்பற்றத் தொடங்கியமையால் உலகம் பூராவும் இந்த வழக்கம் இன்று பரவி விட்டது. அதனால், நத்தார் என்றாலே நத்தார் தாத்தாவும் இன்றியமையாத ஒருவராக அமைந்து விட்டார்.






## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...



# பாரிய பனிப்பாறையொன்று ஆஸியை நோக்கி நகர்கின்றது

அண்டார்டிக் சமுத்திரத்தில் உடைப்பெடுத்துள்ள பாரிய பனிப்பாறையொன்று அவுஸ்திரேலியாவை நோக்கி கடலில் மிதந்து சென்று கொண்டிருப்பதாக 'நாஸா' ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ளது.

கிட்டத்தட்ட ஒரு குட்டித்தீவின் பரப்பை ஒத்த 140 சதுரக் கிலோ மீற்றர் அளவிலான பனிப்பாறையொன்றே இவ்வாறு அவுஸ்திரேலியாவை நோக்கி மிதந்து செல்வதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்தப் பனிப்பாறைக்கு 'பீ 17 பீ' என்று பெயரிடப்பட்டுள்ளது.

புவி வெப்பமடைதலின் விளைவாகவே இந்தப் பனிமலை பாறையாக இவ்வாறு உடைந்து கடலில் மிதப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. தற்போது அவுஸ்திரேலியாவிலிருந்து ஆயிரம் கி.மீற்றர் கடல் மைல் தூரத்தில் மேற்படி பனிப்பாறை மிதந்து கொண்டிருக்கின்றது.

இந்தப் பனிப்பாறை முழுமையாக உருகிவிடுமாயின், அது கடல் நீர்மட்டத்தை உயர்த்தி விடக்கூடிய அபாயத்தைக் கொண்டிருப்பதாகவும் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

# தொழில் வாய்ப்பின்மையை ஒழிக்க ஒபாமா முயற்சி



அமெரிக்காவில் வேலை வாய்ப்பின்மை பிரச்சினைக்கு தீர்வு காணுமுகமாக புதிய செயல் திட்டமொன்றை ஜனாதிபதி பராக் ஒபாமா மேற்கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.


இத்திட்டம் தொடர்பாக டெமோக்ரடிக் மற்றும் ரிப்பப்ளிகன் கட்சிகளின் தலைவர்களுடன் அவர் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி ஒபாமாவின் திட்டத்தின்படி, சிறிய வர்த்தகர்களுக்கு வரிவிலக்கு அளித்தல் மூலம் புதியவர்களுக்கு மேலதிக தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும் என்ற அடிப்படைக் கேற்பவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

ஒபாமா நடத்திய இந்த பேச்சுவார்த்தையில் 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட டெமோக்ரட்டிக், ரிப்பப்ளிக்கன் மற்றும் செனட் சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஃபிஜியில் சூறாவளி

ஃபிஜி தீவுகளில் வீசிய 'மிக்' என்ற சூறாவளியின் காரணமாக பலர் மரணமடைந்துள்ளனர். கடும் மழையுடன் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் நகரப்பகுதிகள் பல இருளில் மூழ்கியதுடன், நான்காயிரத்திற்கும் மேற்பட்டோர் அகதிகளாகியுள்ளனர். ஃபிஜி தீவுகளின் இடர்முகாமைத்துவத் திணைக்களம் இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில், அகதிகளாகி உள்ளோர் உட்பட, வெள்ளத்தின் காரணமாக வீடுகளின் கூரைகளின்மீது நிர்க்கதி நிலையில் உள்ளவர்களைக் காப்பதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## அற்லஸ் கேள்வி - 235

**கேள்வி:** அண்டார்டிக் சமுத்திரத்தில் உடைப்பெடுத்துள்ள பனிப்பாறைக்கு வைக்கப்பட்டுள்ள பெயர் என்ன?

**சரியான விடை**........................................

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 235,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 233 இன் சரியான விடை: 54 நாடுகள்**

**பரிசு பெறுவோர்**

எம்.வெணுஷினி,
49, ஹீரஸ்ஸகல வீதி,
கண்டி.

எஃப்.பாத்திமா ஃபிரா,
212, மிகுந்துபுர, கந்தப்பளை.

பபிதா லோகநாதன்,
கலைவாணி வீதி, வடலியடைப்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகனுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

අම්මා: පුතා බෙල් ගහනවා. කවුද බලන්න.
புதா பெல் கஹனவா. கவுத பலன்ன.
அம்மா: மகன் யார் மணி அடிக்கிறார்கள் என்று பாருங்கள்.

පුතා: ආ... ලියුම්කාරයා අම්මේ. මම යන්නම්.
ஆ... லியும்காரயா அம்மே. மம யன்னம்.
மகன்: ஆ.... தபாற்காரர் அம்மா. நான் போகின்றேன்.

අම්මා: කාටද පුතා ලියුම්?
காடத புதா லியும்?
அம்மா: கடிதம் யாருக்கு மகன்?



පුතා: මගේ නමට තියෙන්නේ.
மகே நமட தியென்னே.
மகன்: எனது பெயருக்கு இருக்கின்றது.

අම්මා: කාගෙන්ද ලියුම පුතා?
காகென்த லியும புதா?
அம்மா: யாரிடம் இருந்து கடிதம் மகன்?

පුතා: ලංකා බැංකුවෙන් අම්මේ.මට සම්මුඛ පරීක්ෂණයට එන්න කියලා.
லங்கா பெங்குவென் அம்மே. மட சம்முக பரீக்ஷனயட என்ன கியலா.
மகன்: இலங்கை வங்கியிலிருந்து அம்மா. என்னை நேர்முகப் பரீட்சைக்கு வரச்சொல்லி இருக்கின்றது.

අම්මා: ඇත්තද පුතා. කවදට ද එන්න කියල තියෙන්නේ?
எத்தத புதா. கவதடத என்ன கியல தியென்னே?
அம்மா: உண்மையாகவா மகன். எப்போது வரச்சொல்லி இருக்கிறார்கள்.

පුතා: ලබන බදාදාට අම්මේ.
லபன பதாதாட அம்மே.
மகன்: வருகிற புதன்கிழமை அம்மா.

අම්මා: ආ... තව දවස් තියෙනවනේ. පුතාගේ සහතික ටික ලෑහැස්ති කරගන්න.
ஆ... தவ தவஸ் தியெனவனே. புதாகே சஹதிக டிக லெஹெஸ்தி கரகன்ன.
அம்மா: ஆ... இன்னும் நாள் இருக்கிறது தானே. மகனுடைய சான்றிதழ்களை எல்லாம் ஆயத்தப்படுத்திக்கொள்ளுங்கள்.

පුතා: හොඳයි අම්මේ.
ஹொந்தய் அம்மே.
மகன்: நல்லது அம்மா.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

உதா: யாருக்குக் கடிதம்?
කාටද ලියුම්?

i. வருகிற புதன்கிழமை நேர்முகப் பரீட்சை.
..................................................

ii. யாரிடம் இருந்து கடிதம்?
..................................................

iii. இன்னும் நாள் இருக்கிறது.
..................................................






பிரதிப் பெயர்ச்சொற்களுக்குப் (Pronouns) பதிலாக, பெயர்ச் சொற்களை (Nouns) எழுவாய் பகுதியில் கையாண்டு, அமைக்கப்பட்ட நிகழ்கால தனி வாக்கியங்களில் காணப்படுகின்ற, வினா நிலை (Interrogative), உடன்பாடு நிலை (Affirmative) மற்றும் எதிர்மறை நிலை (Negative) ஆகிய மூன்று வாக்கியங்களையும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) Does Rohan eat bread at night? (Interrogative)
ரொஹான் இரவில் பாண் சாப்பிடுவதுண்டா? (வினா)

(ஆ) Yes, Rohan eats bread at night. (Affirmative)
ஆம், ரொஹான் இரவில் பாண் சாப்பிடுவதுண்டு. (உடன்பாடு)

(இ) No, Rohan does not eat bread at night. (Negative)
இல்லை, ரொஹான் இரவில் பாண் சாப்பிடுவதில்லை. (எதிர்மறை)

(அ) Does Rohini eat bread at night? (Interrogative)
ரோஹினி இரவில் பாண் சாப்பிடுவதுண்டா? (வினா)

(ஆ) Yes, Rohini eats bread at night. (Affirmative)
ஆம், ரோஹினி இரவில் பாண் சாப்பிடுவதுண்டு.(உடன்பாடு)

(இ) No, Rohini does not eat bread at night. (Negative)
இல்லை, ரோஹினி இரவில் பாண் சாப்பிடுவதில்லை. (எதிர்மறை)

(அ) Does this dog eat meat at night? (Interrogative)
இந்த நாய் இரவில் இறைச்சி சாப்பிடுவதுண்டா? (வினா)

(ஆ) Yes, this dog eats meat at night. (Affirmative)
ஆம், இந்த நாய் இரவில் இறைச்சி சாப்பிடுவதுண்டு. (உடன்பாடு)

(இ) No, this dog does not eat meat at night. (Negative)
இல்லை, இந்த நாய் இரவில் இறைச்சி சாப்பிடுவதில்லை. (எதிர்மறை)

(அ) Does Ranjith drink coffee at night? (Interrogative)
ரஞ்ஜித் இரவில் கோப்பி குடிப்பதுண்டா? (வினா)

(ஆ) Yes, Ranjith drinks coffee at night. (Affirmative)
ஆம், ரஞ்ஜித் இரவில் கோப்பி குடிப்பதுண்டு. (உடன்பாடு)

(இ) No, Ranjith does not drink coffee at night. (Negative)
இல்லை, ரஞ்ஜித் இரவில் கோப்பி குடிப்பதில்லை. (எதிர்மறை)

(அ) Does Ranjini drink tea at night? (Interrogative)
ரஞ்ஜினி இரவில் தேநீர் குடிப்பதுண்டா? (வினா)

(ஆ) Yes, Ranjini drinks tea at night. (Affirmative)
ஆம், ரஞ்ஜினி இரவில் தேநீர் குடிப்பதுண்டு. (உடன்பாடு)

(இ) No, Ranjini does not drink tea at night. (Negative)
இல்லை, ரஞ்ஜினி இரவில் தேநீர் குடிப்பதில்லை. (எதிர்மறை)

(அ) Does this cat drink milk at night? (Interrogative)
இந்தப் பூனை இரவில் பால் குடிப்பதுண்டா? (வினா)

(ஆ) Yes, this cat drinks milk at night. (Affirmative)
ஆம், இந்தப் பூனை இரவில் பால் குடிக்கின்றது. (உடன்பாடு)

(இ) No, this cat does not drink milk at night. (Negative)
இல்லை, இந்தப் பூனை இரவில் பால் குடிப்பதில்லை. (எதிர்மறை)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் எதைச் சொன்னாலும்...

பெரிய காடொன்றில் அடர்ந்து வளர்ந்திருந்தது ஓர் ஆலமரம். அந்த ஆலமரத்தில், அதிக விழுதுகள் தொங்கிக் கொண்டிருந்தன. அந்தப் பக்கமாக ஒரு நரி சென்றுகொண்டிருந்தது. அன்றைய தினம் ஒரு இரையும் அதற்குக் கிடைக்கவில்லை. ஆலமரத்தையும் அதன் விழுதுகளையும் பார்த்த நரிக்கு ஒரு எண்ணம் உண்டாயிற்று. அதைச் செயல்படுத்தவும் ஆயத்தமானது.

அதேவேளை, மான் குட்டி ஒன்று அந்தப் பக்கமாக வருவதைப் பார்த்த நரி, அதனிடம் சென்று "ஏ! மான் குட்டியே... உன்னால் எனக்குச் சமமாக ஓடமுடியுமா? துள்ளிக் குதித்துப் பாய்ந்து ஓடத்தெரியுமா?" என்று கேட்டது.

இதைக் கேட்ட மான்குட்டி, "ஓ! நான் நன்றாகவே ஓடுவேனே" என்று கூறி விரைவாக ஓடிச் சென்றது. அதனுடன் நரியும் சேர்ந்து ஓடிவந்தது. ஆலமரத்தின் அருகில் துள்ளிக் குதித்து ஓடிவந்ததால், ஆலமரத்தின் விழுதுகள், மான்குட்டியின் வயிற்றிலும் கழுத்திலும் நன்றாகச் சிக்கிக் கொண்டன. அந்த விழுதுளில் இருந்து விடுபட முடியாமல் மான்குட்டி தவித்தது. இதைப் பார்த்த நரி, ஹா.... ஹா....ஹா..." என்று சிரித்துக் கொண்டே, "ஏ மான்குட்டியே... நன்றாக மாட்டிக் கொண்டாய்! இதோ இன்னும் சற்று நேரத்தில் நான் குளித்து விட்டு வருகிறேன். இன்று நீதான் எனக்கு விருந்து" என்று சொல்லிவிட்டு அருகிலுள்ள ஒரு குளத்தை நோக்கிச் சென்றது.

ஆபத்தில் மாட்டிக்கொண்ட மான்குட்டி, "தன்னை விடுவிக்க யாரும் வரமாட்டார்களா?" என்று தவித்துக் கொண்டிருந்தது. அவ்வேளை, அந்த மரத்தின் மேல் ஏற்கனவே இருந்த குரங்கை இந்த நரியும் மான் குட்டியும் கவனிக்கவில்லை.அக்குரங்கானது அந்த மான்குட்டியை அழைத்து, "ஏ! மான்குட்டியே... எல்லாவற்றையும் நான் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். யார் எதைச் சொன்னாலும், எதற்குச் சொல்கின்றனர் என்பது பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? அதிலும் இந்த நரி உன் இனத்தாரின் எதிரி அல்லவா? மற்றவர்களை தந்திரமாக ஆபத்தில் சிக்க வைப்பதில் கைதேர்ந்ததாயிற்றே! இனிமேலாவது சிந்தித்துச் செயற்படு" என்று கூறி, மான்குட்டியின் மீது சிக்கியிருந்த விழுதுகளை அப்புறப்படுத்தி அதை விடுவித்தது.



"என்னை மன்னித்து விடுங்கள்! குரங்காரே! இனி இவ்வாறு சிந்திக்காமல் செயல் படமாட்டேன்" என்றது மான்குட்டி.

"சரி! சரி! உணர்ந்து கொண்டால் சரிதான். நீ உடனே அந்த நரி வருவதற்குள் இங்கிருந்து தப்பித்து ஓடிவிடு" என்று கூறியது.

மான்குட்டியும் தன்னைக் காப்பாற்றிய குரங்குக்கு, "நன்றி" கூறிவிட்டு தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடி மறைந்தது. திரும்பி வந்த நரி, மரத்தின் அருகில் மான்குட்டி இல்லாததைக் கண்டு பெருத்த ஏமாற்றமடைந்தது. இதை மரத்தின் மீதிருந்த குரங்கு கண்டு ஹா....ஹா..... என்று உரக்கச் சிரித்தது. கபடமான அந்தக் குள்ளநரிக்கு, குரங்கு நல்ல பாடம் புகட்டியது.

---

# வெள்ளைக்கல் மாளிகை




இளவரசன் இவானிடம் காட்டுவாத்து மனிதக் குரலில் பின்வருமாறு கூறியது, "என்னைக் கொல்லவேண்டாம், இளவரசன் இவான், என்றாவது என்னுடைய உதவி உனக்குத் தேவைப்படலாம்"

இளவரசன் இவான் காட்டு வாத்தைப் போக விட்டுவிட்டு மேலும் நடந்தான். அந்த நேரத்தில் முயல் ஒன்று ஓடிவந்து கொண்டிருந்தது. இளவரசன் இவான் அதைக் குறிவைத்து அம்பு எய்யத் தயாரானான். ஆனால், மனிதக் குரலில் முயல் பேசியது;

"என்னைக் கொல்லவேண்டாம், இளவரசன் இவான், என்றாவது என்னுடைய உதவி உனக்குத் தேவைப்படலாம்"

இளவரசன் இவான் முயலைப் போக விட்டுவிட்டு மேலும் நடந்தான். பின்னர் நீலக் கடலுக்கு வந்து சேர்ந்தான். 'பைக்' மீன் ஒன்று மணற்பரப்பில் மூச்சுத் திணறியபடி கிடப்பதைக் கண்டான்.

"என்மீது இரக்கம் காட்டு, இளவரசன் இவான். நீலக் கடலுக்குள் என்னை தூக்கி வீசு" என்றது பைக் மீன்.


உடனே பைக் மீனைக் கடலுக்குள் வீசிவிட்டு கடற்கரை நெடுகிலும் நடந்தான் இளவரசன் இவான். நீண்ட தூரம் நடந்த பின்னர் இறுதியில் நூற்கண்டு அடர்ந்த காட்டிற்குள்ளாக உருண்டு சென்றது. அக்காட்டில் சிறு குடிசை ஒன்று கோழிக்கால்களில் நின்று வட்டமடித்துக் கொண்டிருந்தது.

"சின்னஞ்சிறு குடிலே, சின்னஞ்சிறு குடிலே! உன் முகப்பை என் பக்கமும் பின்புறத்தைக் காட்டின் பக்கமும் காட்டியவாறு நில்" என்றான் இளவரசன் இவான்.

அவனது பக்கமாக முகப்பையும் காட்டின் பக்கமாகப் பின்புறத்தையும் காட்டியவாறு குடிசை திரும்பியது. இளவரசன் இவான் அதற்குள்ளாக நுழைந்தான். அங்கே சூட்டடுப்புப் பரண் மீது கூரையைத் தொடும் மூக்குடனும் தரையைத் தொடும் மோவாயுடனும் சூனியக்காரி பாபா-யகா இருந்தாள்.

"எதற்காக இங்கு வந்தாய், அருமை இளைஞனே? யாரையேனும் தேடி வந்திருக்கிறாயா?" எனக் கேட்டாள் பாபா-யகா.

இளவரசன் இவான் பேசினான்; "நீ, முதலில் எனக்கு நீராவிக் குளியலுக்கு ஏற்பாடு செய். பின்னர், உண்ணவும் பருகவும் தா. அதன் பிறகு உனது கேள்விகளைக் கேள்"



உடனே, பாபா-யகா அவனுக்கு நீராவிக் குளியலுக்கான ஏற்பாடுகளைச் செய்து, அத்துடன்,உணவும் பானமும் கொடுத்தாள். பின்னர் இளவரசன் இவான் அறிவும் புத்திசாலித்தனமும் மிக்க தன் மனைவி வசிலீசாவைத் தேடிக் கொண்டிருப்பதை அவளிடம் கூறினான்.

"அவள் எங்கே இருக்கிறாள் என்பது எனக்குத் தெரியும். மரணமற்ற கஷேய் அவளைத் தன் பிடியில் வைத்திருக்கிறான். அவளைத் திரும்ப அடைவது மிகவும் சிரமமானதாக இருக்கும். ஏனெனில், கஷேயை வெற்றி கொள்வது அவ்வளவு சுலபமானது அல்ல. அவனுடைய மரணம் ஓர் ஊசி முனையில் இருக்கிறது. அந்த ஊசி ஒரு முட்டையில் இருக்கிறது. அந்த முட்டை ஒரு வாத்தின் உள்ளே இருக்கிறது. வாத்து ஒரு முயலில் இருக்கிறது. முயல் ஒரு கற்பேழையில் இருக்கிறது. கற்பேழை உயரமான ஓக் மர உச்சியில் இருக்கிறது. அதை மரணமற்ற கஷேய் தனது சொத்தாகக் கண் போல பாதுகாத்து வருகிறான்" என்றாள் பாபா-யகா.

இளவரசன் இவான் அன்றைய இரவை பாபா-யகாவினுடைய குடிசையில் கழித்தான், காலையில் அந்த உயரமான ஓக் மரம் எங்கே இருக்கிறது என்பதை அவனிடம் சொன்னாள் பாபா-யகா. அவன் நீண்ட தூரம் நடந்து இறுதியில் ஓக் மரத்தைச் சென்றடைந்தான். அங்கே அது பிரமாண்டமானதாக நின்றது. அதன் உச்சியின்மீது இருந்த கற்பேழையை அடைவது மிகுந்த சிரமமானதாக இருந்தது.

திடீரென்று ஒரு கரடி ஓடிவந்து ஓக் மரத்தை வேரோடு பிடுங்கி எறிந்தது. கற்பேழை கீழே விழுந்து உடைந்து திறந்து கொண்டது. அதில் இருந்து ஒரு முயல் தாவிக் குதித்து நாற்கால் பாய்ச்சலில் ஓடியது. ஆனால், மற்றொரு முயல் தோன்றி அதைத் துரத்தியது. முதலாவது முயலைப் பிடித்து அதைச் சுக்கு நூறாகக் கிழித்தது.அந்த முயலில் இருந்து ஒரு காட்டு வாத்துவெளியேறி வானுயரப் பறந்தது. ஆனால், இமைப்பொழுதில் இன்னொரு வாத்து பாய்ந்து வந்து பலமாகத் தாக்கவே, அது முட்டையிட்டது. அந்த முட்டை நீலக் கடலுக்குள் விழுந்துவிட்டது.

இது கண்டு இளவரசன் இவான் கண்ணீர் மல்கக் கதறி அழத் தொடங்கினான்.ஏனெனில்,கடலில் அவனால் முட்டையை எவ்வாறு கண்டுபிடிக்க முடியும்? ஆனால், திடீரென்று பைக் மீன் ஒன்று முட்டையை வாயில் ஏந்தியபடி கரைக்கு நீந்தி வந்தது. இளவரசன் இவான் முட்டையை

**இளவரசன் இவான் அறிவும் புத்திசாலித்தனமும் மிக்க தன் மனைவி வசிலீசாவைத் தேடிக் கொண்டிருப்பதை சூனியக்காரியிடம் கூறினான்**

பைக் மீனிடம் இருந்து வாங்கி உடைத்து, ஊசியை வெளியே எடுத்து அதன் முனையை உடைக்க முயன்றான். அவன் வளைக்க வளைக்க, மரணமற்ற கஷேயும் அதிகமாக வளையவும் நெளியவும் செய்தான். நீண்ட முயற்சியின் பின் இளவரசன் இவான் ஊசி முனையை உடைக்க, மரணமற்ற கஷேய் செத்துக் கீழே விழுந்தான்.

இளவரசன் இவான் அவனுடைய வெள்ளைக்கல் மாளிகைக்குச் சென்றான். அங்கு அறிவும் புத்திசாலித்தனமும் மிக்க வசிலீசா அவனை நோக்கி ஓடிவந்தாள். இதன்பின்னர் இளவரசன் இவானும் அறிவும் புத்திசாலித்தனமும் மிக்க வசிலீசாவும் தங்களது அரண்மனைக்கு திரும்பிச் சென்று நீண்ட காலத்திற்கு மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்கள்.

(அடுத்த இதழில் 'அநாதைச் சிறுமி' ஆரம்பமாகின்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டெஸ்ட் கால அட்டவணை மாற்றப்படும் அறிகுறி

International Cricket Council

2012 ஆம் ஆண்டின் பின்னர் நடத்தப்படவேண்டிய டெஸ்ட் போட்டிகளுக்கான கால அட்டவணையில் சில திருத்தங்களை மேற்கொள்வதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை உள்ள நியதியின்படி ஒவ்வொரு நாடும் உள்நாட்டில் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் வெளிநாட்டில் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் கலந்துகொள்ள வேண்டியது கட்டாயமாகும். இதனையிட்டு பல நாடுகள் அதிருப்தி தெரிவித்து வந்துள்ளன.

எனவே, ஐ.சி.சி இது குறித்து ஆலோசித்ததையடுத்தே அதில் குறித்த மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு உத்தேசித்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதன்படி, நடைமுறையிலுள்ள ஒப்பந்தம் 2012 இல் முடிவடைந்ததும் புதிய ஒப்பந்த விதிகளின்படி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தலா ஒரு டெஸ்ட் போட்டியில் கலந்து கொண்டால் போதுமானது என்று விதிமுறை மாற்றப்படும்.

# சுசந்திகாவின் பதக்கத்தில் மாற்றம்



2000 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் மகளிர் பிரிவு 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் வழங்கப்பட்ட பதக்கங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அதாவது, இலங்கை அணி சார்பாக வெண்கலப் பதக்கத்தை வெற்றியீட்டிய சுசந்திகா ஜயசிங்ஹவுக்கு வெள்ளிப் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.மேற்படி, போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்று தங்கத்தை வென்ற அமெரிக்க வீராங்கனையான மேரியன் ஜோன்ஸ் ஊக்கமருந்து பயன்படுத்தியதை ஒப்புக்கொண்டமையால் அவருக்கான பதக்கம் மீளப்பெறப்பட்டதையடுத்தே மூன்றாம் நிலையிலிருந்த சுசந்திகா இரண்டாம் நிலைக்கு உயர்த்தப்பட்டு வெள்ளிப்பதக்கம் வழங்கப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது.

இதன்படி, இப்போட்டியில் **முதலாவது இடத்தை** போலிக் டேவிஸ் (பஹாமாஸ்), **இரண்டாவது இடத்தை** சுசந்திகா(இலங்கை), **மூன்றாவது இடத்தை** பெவர்லி மெக்டொலைட் (ஜமெய்க்கா) ஆகியோர் பெறுகின்றனர்.

# பந்துவீச்சு பயிற்சியாளராக வக்கார் யூனுஸ்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக அந்த அணியின் முன்னாள் வீரர் வக்கார் யூனுஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

விரைவில் அவுஸ்திரேலியாவுடன் போட்டித்தொடரொன்று நடைபெறவுள்ள நிலையில் அதற்கான பலமான நிலைக்கு பாகிஸ்தான் அணியை தோற்றுவிப்பதற்காகவே வக்கார் யூனுஸ் பந்துவிச்சுப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மைக்காலமாக பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சு முன்னைய காலத்தைப் போல் நேர்த்தியாக இல்லை என்ற விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இம்ரான்கான் வசீம் அக்ரம் ஆகியோர் பாகிஸ்தான் அணியில் போட்டியிட்ட காலங்களில் அவர்களின் வேகப்பந்து வீச்சு எதிரணித் துடுப்பாட்ட வீரர்களுக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாகவே இருந்து வந்தது. எனவே, தற்போது மீண்டும் அத்தகைய ஓர் அச்சுறுத்தலான பந்து வீச்சுப்பாணியை உருவாக்குவதற்காகவே வக்கார் யூனுஸ் ஆர்வம் கொண்டுள்ளார் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

# உலகக் கிண்ண கால்பந்தாட்ட பிரிவுகளில் அடங்கும் நாடுகள்



2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 11 ஆம் திகதி வரை 19 ஆவது உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் தென் ஆபிரிக்காவில் நடைபெறவுள்ளமை நாம் அறிந்ததே. இப்போட்டியில் கலந்து கொள்வதற்கான தகுதிகாண் போட்டிகள் நடைபெற்று முடிந்து 32 அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அதில் எட்டுப் பிரிவுகள் பிரிக்கப்பட்டு இந்த எட்டுப் பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் நான்கு அணிகள் இடம்பெறும் வகையில் குலுக்கல் முறையில் அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய எட்டுப் பிரிவுகளில் இடம்பெற்றுள்ள அணிகளின் விபரம் வருமாறு:

A - தென்ஆபிரிக்கா, மெக்ஸிக்கோ, உருகுவே, பிரான்ஸ்
B - ஆர்ஜன்டீனா, நைஜீரியா, தெ.கொரியா, கிறீஸ்
C - இங்கிலாந்து, அமெரிக்கா, அல்ஜீரியா, ஸ்லோவேனியா
D - ஜேர்மனி, அவுஸ்திரேலியா, சேர்பியா, கானா
E - நெதர்லாந்து, டென்மார்க், ஜப்பான், கெமரூன்
F - இத்தாலி, பராகுவே, நியூஸிலாந்து, ஸ்லோவேக்கியா
G - பிரேஸில், வடகொரியா, ஐவரிகோஸ்ட், போர்த்துக்கல்
H - ஸ்பெய்ன், சுவிட்சர்லாந்து, சிலி, ஹொன்டூராஸ்

# கிப்ஸ் ஓய்வு...?



தென்ஆபிரிக்க கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிப்ஸ் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மைக்காலமாக போட்டிகளில் கிப்ஸ் பிரகாசிக்கத் தவறியமையால், கிப்ஸ் மீது பலவகையிலான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறே இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டிகளிலும் அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இத்தகையதோர் பின்னணியிலேயே கிப்ஸ் ஓய்வுபெறவுள்ளார் என்ற செய்தியும் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை 90 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டு 6 ஆயிரத்து 167 ஓட்டங்களையும், 245 ஒருநாள் போட்டிகளில் கலந்து கொண்டு 8 ஆயிரத்து 60 ஓட்டங்களையும் கிப்ஸ் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எய்ட்ஸ் தடுப்பில் முன்னேற்றம்




'எய்ட்ஸ்' ஓர் ஆட்கொல்லி நோயாகும்.

உலகை அச்சுறுத்தி வருகின்ற இந்த ஆட்கொல்லி நோயைக் கட்டுப்படுத்துவதற்காக உலக நாடுகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. அத்துடன், அதனைத் தடுப்பதற்கான மருந்துகளை உற்பத்தி செய்யும் முயற்சிகளும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டவண்ணமே இருக்கின்றன.

இந்நிலையில், அண்மையில் தாய்லாந்தில் மேற்கொள்ளப்பட்ட எய்ட்ஸ் தடுப்பு மருந்து தொடர்பான ஓர் ஆய்வினை அடுத்து, எய்ட்ஸ் தடுப்பு மருந்து தொடர்பில் சிறந்ததொரு முன்னேற்றத்தை எட்டக்கூடிய வாய்ப்புக் கிடைத்துள்ளது. அமெரிக்க ராணுவத்தின் நிதி உதவியில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வுக்காக 16 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உட்படுத்தப்பட்டனர். அதன்படி, அவர்களில் ஒரு பகுதியினருக்கு புதிதாக கண்டறியப்பட்ட தடுப்பு மருந்து ஏற்றப்பட்டது. ஏனையவர்களுக்கு வழக்கமாகப் பயன்படுத்தப்படுகின்ற தடுப்பு மருந்து ஏற்றப்பட்டது. இதனையடுத்து புதிய தடுப்பு மருந்து ஏற்றப்பட்டவர்களுக்கு வழக்கமான தடுப்பு மருந்து ஏற்றப்பட்டவர்களைவிட 30 சதவீதம் அதிகமான அளவில் எச்.ஐ.வி தொற்று ஏற்படுவதற்கான ஆபத்து குறைந்துள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, இந்த ஆய்வானது, எய்ட்ஸ் தடுப்பு மருந்து குறித்து மேலதிக ஆய்வுகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஊக்கத்தை அளித்துள்ளதாகவும் இது எதிர்கால உலகில் எய்ட்ஸ் நோய் பரவுவதைத் தடுத்துக்கொள்வதற்கான சிறந்த வழிமுறையாகவும் வெற்றியாகவும் அமையும் என்றும் கருதப்படுகின்றது.



# நகம் சொல்லும் நலம்



எம்மில் பெரும்பாலானோர் தமது உடல், கேசம் என்பனவற்றின் ஆரோக்கியம் பற்றியே அதிக அக்கறை காட்டுகின்றனர். தவிர, ஏனைய பாகங்கள் குறித்து உரிய அக்கறை காட்டுவது குறைவு. உதாரணமாக, பல், கண், நகம் போன்வற்றின் ஆரோக்கியத்தில் விசேட கவனம் செலுத்துவதில்லை.

எனினும், நமது உடல் நலக்குறையைக் காட்டக்கூடியவையாக நகங்கள் இருக்கின்றன. நகங்கள் நொருங்குவது, கெட்டியாவது, பிளவுபடுவது, மஞ்சள் நிறமாவது, கருமை நிறமடைவது போன்ற அறிகுறிகள் எமது உடலில் ஊட்டச்சத்துக்களின் குறைபாடு, குருதி ஓட்ட சீரின்மை, சுரப்பிகளில் கோளாறு என்பனவற்றை வெளிக்காட்டுவதாகவே அமைகின்றன. எனவே, நகங்களில் மேற்கூறிய மாற்றங்களை அவதானிக்கக்கூடியதாக இருப்பின் வைத்தியரை நாடுவது சிறந்தது எனவும் கூறப்படுகின்றது.

நமது நகங்கள் வருடத்திற்கு சராசரியாக இரண்டு அங்குலம் வரை வளரக்கூடியவை என்பது குறிப்பிடத்தக்கது.

# 2009, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



பொலன்னறுவை முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவனான என்.இன்ஷாப், 141 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எல்.நியாஸ்-ஐ.நியாஸா ஆகியோரின் புதல்வராவார்.



பொலன்னறுவை முஸ்லிம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த எம்.வஸீம், 140 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.சனூன்-எச்.ஜெமீலா தம்பதியரின் புதல்வராவார்.



களு/அல்-பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவியான எஃப். ஹுஸ்னா, 141 புள்ளிகளை பெற்றுள்ளார். இவர், எம்.ஹுஸைன்-பீ.ரிஸானியா ஆகியோரின் புதல்வியாவார்.



பது/வேவல்ஹின்ன தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் யோ.லிங்கேஸ்வரி, 138 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



அட்டுளுகம, அல்-கஸ்ஸாலி மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் ரஹ்மானியா நஸீர், 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



அட்டுளுகம, அல்-கஸ்ஸாலி மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவியான மிஸ்பா நஸீர், 143 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



அட்டுளுகம, அல்-கஸ்ஸாலி மத்திய கல்லூரியின் மாணவி நிஹ்லா நிலார், 142 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



அட்டுளுகம, அல்-கஸ்ஸாலி மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் முஸ்பிக் முஷா, 141 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



வாழைச்சேனை இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் டெல்சி கிரசென்சியா, 150 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



வாழைச்சேனை இந்துக் கல்லூரி மாணவியான சி.ருக்ஷினி, 142 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



வாழைச்சேனை இந்துக் கல்லூரியில் கற்கின்ற ர.நர்மிலா, 144 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



செ.சதுர்ஷனா 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், வாழைச்சேனை இந்துக் கல்லூரி மாணவியாவார்.



வாழைச்சேனை இந்துக் கல்லூரி மாணவியான தே.அகலிகா, 157 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



ஜெ.போல் 164 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், வாழைச்சேனை இந்துக் கல்லூரி மாணவராவார்.



வாழைச்சேனை இந்துக் கல்லூரி மாணவரான இ.ரேணுபிரவீன் 152 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



ம.அபிலாஸ் 143 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், வாழைச்சேனை இந்துக் கல்லூரியில் கல்வி பயில்கின்றார்.



அ.அஜய் 140 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், வாழைச்சேனை இந்துக் கல்லூரி மாணவராவார்.



வாழைச்சேனை இந்துக் கல்லூரி மாணவரான ம.லோஷனன், 165 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



ம.துர்க்கா 140 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், வாழைச்சேனை இந்துக் கல்லூரியில் கல்வி பயில்கின்றார்.




வாழைச்சேனை இந்துக் கல்லூரி மாணவியான வி.கிசோமினி, 140 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



பொலன்னறுவை, அல்-அஸ்ஹர் மகா வித்தியாலயத்திலிருந்து சித்தியடைந்த மாணவர்கள் தங்கள் ஆசிரியருடன் நிற்பதையே படத்தில் காண்கின்றீர்கள். (இடமிருந்து வலமாக) எம்.ஆசிக் (148 புள்ளிகள்), எப்.தாசிபா (143 புள்ளிகள்), ஆசிரியர் ஏ.இக்பால், எம்.சிப்ரான் (163 புள்ளிகள்), எம்.சப்ராஸ் (150 புள்ளிகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1 இடைவெளிகளை நிரப்புக







தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்


1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.12.30 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 240**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**


## 4 மேலுள்ள ஆங்கிலச் சொற்களை கட்டத்தினுள் இனங்கண்டு, நிறந்தீட்டுங்கள்

GERMS DISEASE SOAP
WASH HANDS WARM WATER
HYGIENE CLEAN HEALTH

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| O | Z | S | E | I | M | J | K | I |
| R | T | O | N | C | P | A | O | S |
| E | U | M | E | T | X | B | D | T |
| T | V | E | I | G | Q | N | I | V |
| A | E | S | G | O | A | F | C | H |
| W | C | A | Y | H | B | P | X | R |
| M | L | E | H | E | A | L | T | H |
| R | E | S | E | B | U | R | K | O |
| A | A | I | S | F | F | B | L | M |
| W | N | D | S | M | R | E | G | N |




## 2 கூட்டுக



## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 237 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எம்.என்.எம்.நிப்ராஸ்,
தரம் - 6,
அல்-மனார் தே.பா.,
ஹந்தஸ்ஸ.

**போட்டி: 02**
டிலக்ஷன் ஜெறி,
தரம் - 7C,
கார்மேல் பற்றிமா தே.பாட.,
கல்முனை.

**போட்டி: 03**
ரிம்ஸியா முனாஸ்,
தரம் - 5,
உடுகொட அரபா ம.வித்.,
உடுகொட.

**போட்டி: 04**
க.சுகந்தினி,
தரம் - 3,
நு/டயகம மேற்கு இல 01, த.வித்.,
டயகம.

**போட்டி: 05**
டி.வித்யா ஷாகர்,
தரம் - 6J,
புனித அந்தோனியார் கல்.,
கடுகஸ்தொட.

### பாராட்டுப் பெறுவோர்

- ஏ.அஸ்லா அஷ்ரப், தரம் - 8A, எதுன்கஹகொடுவ மு.ம.கல்., எதுன்கஹகொடுவ.
- க.யுகன்யா நேத்ரா, தரம் - 8C, இ/பரியோவான் த.ம.வித்., இறக்குவானை.
- அஸ்கா ஹகீம், அக்குறனை.
- எம்.எஃப்.சஸ்னா, தரம் - 9B, நஸ்ரியா மத்.கல்., சிலாபம்.
- ப.சிந்துஜன், தரம் - 9D, மானிப்பாய்.
- ப.அனுஷா, தரம் - 8C, மீசாலை வீரசிங்கம் ம.வித்., யாழ்ப்பாணம்.
- ந.லிருப்தா, தரம் - 5, பள்ளகொட த.வித்., நவுத்துடுவ.
- வே.நயனீசன், வவுனியா
- ச.லதுசனா, நீர்கொழும்பு.
- வி.லோஜிதன், தரம் - 2, இந்துக் கல்., கொழும்பு.

## உங்களுக்குத் தெரியுமா? 5

(A) புளிப்பு சுவையுடைய மஞ்சள் நிறப் பழத்தைக் கொடுக்கும் ஒருவகைத் தாவரம். இது பூக்கும் தாவரக் குடும்பத்தைச் சேர்ந்தது. இதன் பழம் பெரும்பாலும் அதன் சாற்றுக்காகவே பயன்படுத்தப்படுகின்றது. இதன் சாற்றில் 5% அளவுக்கு 'சிட்ரிக்' அமிலம் அடங்கியிருக்கின்றது. விற்றமின் C செறிந்துள்ளது. மருத்துவக்குணம் மிக்கது. அத்துடன், இதன் சாறு வயிற்றுப்போக்கு, அஜீரணம் என்பனவற்றைக் கட்டுப்படுத்தக்கூடியது. மேலும் சமையலில் உணவுகளுக்குச் சுவை சேர்ப்பதற்காகவும் பயன்படுகிறது. இந்த தாவரத்தின் பெயர் தெரிந்திருந்தால், அதனைக் கீழுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

தாவரத்தின் பெயர். : ....................................................

(B) கிழக்காசியாவில் உள்ள ஒரு நாடாகும். ஆசியாவிலேயே பரப்பளவில் மிகப்பெரிய நாடாகவும் உலகில் ரஷ்யா, கௌடா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக பரப்பளவின்படி மூன்றாவது பெரிய நாடாகவும் விளங்குகின்றது. அத்துடன், உலகில் சனத்தொகை அதிகமுள்ள நாடுகளில் முதலிடம் வகிக்கிறது. நாட்டின் நாணய அலகு 'ரென்மின்பி' ஆகும். மெண்டரின் பிரதான மொழியாக இருக்கின்றது.

இந்த நாட்டின் பெயரை எழுதுக. ........................................

## அறிவுக்கு விருந்து - 237 விடைகள்

**போட்டி: 01**




**போட்டி: 02**

1. LXIX - 69
2. D - 500
3. CMX - 910
4. XIV - 14
5. LXVIII - 68

**போட்டி: 03**

1. அன்னம் இட்டவர் வீட்டில் கன்னம் இடலாமா?
2. பள்ளிக்கணக்கு புள்ளிக்கு உதவாது.
3. கிட்டாதாயின் வெட்டென மற.
4. சொல்லாமற் செய்வார் நல்லோர். சொல்லியுஞ் செய்யார் கசடர்.

**போட்டி: 05**

2, 4, 5 ஆவது படங்கள் ஒரே மாதிரியானவை.

## வழி காட்டுங்கள் 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டிசம்பர் 25 ஆம் திகதி நத்தார் தினம் ஆகும். உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவ மக்கள் கிறிஸ்மஸ் எனப்படும் இந்த நத்தார் தினத்தை வெகுவிமர்சையாகக் கொண்டாடி வருகின்றனர். கடவுளால் படைக்கப்பட்ட மனிதன் பாவ வாழ்வில் மூழ்கிக் கிடக்கின்ற அவலத்தைப் பார்த்த கடவுள் மனிதனை அந்த பாவ வாழ்விலிருந்து மீட்பதற்காக மனிதப் பிறவியெடுத்து இயேசு கிறிஸ்து எனும் பெயரில் அவதரித்த உன்னத நாளே நத்தார் தினமாக கொண்டாடப்படுகின்றது.

# மீட்பர் பிறந்த நத்தார் தினம்

ஏறக்குறைய 2008 வருடங்களுக்கு முன்னர் மத்திய கிழக்கில் உள்ள பெத்தலேகம் என்ற நகரில் சூசை என்பவருக்கும் கன்னி மரியாளுக்கும் மகனாக இயேசு கிறிஸ்து பிறந்தார்.

நடுங்கும் குளிரில் ஏழ்மையுடன் பிறந்த இயேசு கிறிஸ்து மனுக்குலத்தை மீட்பதற்காகவே அவதரித்தார் என்பதை அவரது வாழ்நாட்கள் நன்றாகவே எடுத்துக் காட்டின.

இயேசு கிறிஸ்து ஒரு நல்மாணவனாக, முன்மாதிரியான இளைஞனாக, வழிகாட்டும் தலைவனாக என சமூகத்துடன் ஒன்றித்து வாழ்ந்துவந்தார். எப்படியும் வாழ்வதல்ல வாழ்க்கை; வாழ்க்கையை இப்படித்தான் வாழவேண்டும் என்பதை தன்மூலம் மாந்தர்களுக்கு தெளிவுபடுத்துவதில் மிகுந்த சிரத்தையை மேற்கொண்டவர்தான் இயேசு கிறிஸ்து.




இறைவன் நினைத்திருந்தால் ஒரு மாடமாளிகையில் மனிதப் பிறவி எடுத்திருந்திருக்கமுடியும். ஆனால், அவர் அவ்வாறு செய்யவில்லை. வசதியற்ற ஒரு குடும்பத்தில் பிறந்ததன் மூலம் அடிமட்ட மக்களின் வேதனைகளை, கஷ்டங்ளை அனுபவித்தவாறே அவர்களுக்கு சேவை செய்து, இறைபாதையை அவர்களுக்கு உணர்த்தவேண்டும், சமூதாய ஏற்றத்தாழ்வை இல்லாது செய்யவேண்டும் என்பதற்காகவே அவ்வாறு வறிய குடும்பத்தில் இயேசு பிறப்பெடுத்தார்.

நாளடைவில் இயேசுவின் புகழ் உலகெங்கும் பரவியதுடன் இயேசுவின் போதனைகளும் வேரூன்றத் தொடங்கின. அதன் பயனாக இன்று உலகெங்கிலும் கோடிக்கணக்கான கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவை கடவுளாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

மனிதர்களுக்காகவே பிறந்து, மனிதர்களுக்காகவே மரித்த இயேசு கிறிஸ்து கிறிஸ்தவர்களின் மனங்களில் குடிகொண்டுள்ளார். எனவே, அவர் பிறந்த தினத்தை கொண்டாடுவதன் மூலம் இயேசு கூறிய நல்வழிக் கருத்துக்களை நினைவு கூருவது மட்டுமன்றி வளர்ந்து வரும் இளம் சமுதாயத்தினருக்கும் அவரது நற்போதனைகளை அறியச் செய்யும் நன்னாளாகவும் அது அமைகின்றது எனலாம்.

## ஆலயம் செல்லுதல்

இயேசுவின் பிறப்பை குறிக்கும் டிசம்பர் 25ஆம் திகதியன்று நள்ளிரவு 12 மணிக்கு கிறிஸ்தவ ஆலயங்களில் திருப்பலி பூசை நடைபெறும்.



கிறிஸ்தவர்கள் குடும்பமாக ஆலயத்திற்குச் சென்று பூசையில் கலந்து கொள்வதுடன், ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களையும் பரிமாறிக்கொள்வர்.

## அலங்கரிப்பு

மேலும், வீடுகளில் நத்தார் மரம் வைக்கப்பட்டு அலங்கரிக்கப்படுகின்றன. இயேசுவின் பிறப்பைக் காட்டும் விதமாக பாலன் குடிலும் அமைக்கப்பட்டிருக்கும். அத்துடன், கிறிஸ்து பிறந்த நள்ளிரவு 12 மணிக்கு பட்டாசு கொளுத்தி வாணவேடிக்கைகளுடன் மகிழ்ச்சி ஆரவாரத்தையும் வெளிப்படுத்துவதுண்டு. இயேசு பிறந்தபோது வானில் தோன்றிய நட்சத்திரத்தின் அடையாளமாக கிறிஸ்தவர்கள் தமது வீடுகளில் நட்சத்திரங்களை அலங்காரமாகத் தொங்க விடுகின்றனர். தங்கள் வீடுகளிலும் இயேசு பிறந்திருக்கின்றார் என்ற அறிவிப்பாகவே இவ்வாறு செய்யப்படுகின்றது.

உண்மையில் இயேசு பிறந்த இந்த உன்னத நாளானது வெறும் கொண்டாட்டத்துடன் மட்டும் நிறைவு பெறுவதல்ல, நெறி தவறாத வாழ்க்கை வாழ்ந்து இறைவழி நடக்க ஒவ்வொரு மனிதரும் தமது வாழ்நாளை நல்வழிபடுத்தும் நல்லதோர் ஒளி நாளாகவும் அமைதலே இந்த நத்தார் தினத்தின் சிறப்பாகும்.

# இலங்கையில் நத்தார் வரலாறு



கி.பி 6 ஆவது நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் கொஸ்மாஸ் இண்டிகொப் லெய்ட்ஸ் எழுதிய 'Topographia Christiana' என்ற நூலில் அக்காலப் பகுதியில் தப்ரபேனில் (இலங்கையில்) கிறிஸ்தவர்கள் வசித்ததாகவும் அவர்களுக்குரிய தேவாலயத்தில் ஒரு பாதிரியார் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இலங்கையில் அனுராதபுர ராச்சியத்தில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்ததாக, 1913 ஆம் ஆண்டு அனுராதபுரத்தில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் கண்டெடுக்கப் பட்ட இரண்டு சிலுவைகளாலும் வவுனியாவுக்கு அண்மையில் அகழ்ந்தெடுக்கப் பட்ட திருமுழுக்குத் தொட்டியின் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் எழுதப்பட்ட முதலாவது நத்தார் பண்டிகை 1505 இல் இலங்கைக்கு கத்தோலிக்கர்களான போர்த்துக்கேயர் வருகையை அடுத்தே நடைபெற்றதாக கூறப்படுகின்றது. 1505 நொவெம்பர் 15 ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தை அடைந்த லோலோன்சோ டி அல்மேதா தலைமையிலான போர்த்துக்கேய மாலுமிக் குழுவினர் அங்கு தமது கப்பலை பழுது பார்க்கும் பணிகளிலும் கோட்டே அரசனுடன் தொடர்புகளையும் மேற்கொண்ட அதேவேளை, கொழும்புத் துறைமுகத்தில் சிறிய தேவாலயம் ஒன்றையும் கட்டினார்கள். இத்தேவாலயத்தில் 1505 ஆம் ஆண்டுகளில் முதலாவதாக கிறிஸ்மஸ் திவ்ய பலியை ஒப்புக்கொடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.





இலங்கையில் நத்தார் கொண்டாட்டங்கள் முக்கிய இடத்தைப் பெறுவதுடன், கிறிஸ்தவர்கள் சமய நிகழ்வுகளில் பங்கு கொள்ளும் அதேவேளை ஏனைய சமயத்தவர்களும் சமய சார்பற்ற விடுமுறையாக இதனைக் கொண்டாடுவது சிறப்பம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருகக்காட்சிச்சாலை கூண்டுக்குள் மனிதர்கள்

மிருகக்காட்சிச்சாலையில் கூண்டுக்குள் மிருகங்களைத் தான் காணலாம். ஆனால், போலந்து நாட்டின் வோர்ஸோ மிருகக்காட்சிச்சாலையில் கூண்டுக்குள் இரண்டு மனிதர்களையும் காணக்கூடிய ஆச்சரியமான நிகழ்வைக் காணலாம். மிருகக்காட்சிச்சாலைக்கு செல்கின்றவர்களில் ஏராளமானவர்கள் இந்த மனிதர்கள் உள்ள கூண்டுக்கு அருகேயே அதிகமாக குழுமி பார்ப்பதைக் காணலாம்.

உண்மையில் கூறப்போனால் மனித இனம்கூட விலங்கினத்தைச் சேர்ந்ததே என்பதை அநேகர் உணர மறுக்கின்றனர். இதனை உணர்த்தும் நோக்கில்தான், வோர்ஸோ மிருகக்காட்சிச்சாலை அதிகாரிகள் குரங்குகள் அடைக்கப்பட்டிருந்த ஒரு கூட்டில் ஆண், பெண் என்று இரண்டு மனிதர்களை அடைத்துப் பார்வைக்கு வைத்துள்ளனர். இது எவ்வாறு நடைபெற்றதென்றால், இவ்வாறு மனிதர்களைக் கூண்டில் அடைத்து காட்சிப்படுத்தும் தமது விருப்பத்தை மிருகக்காட்சிச்சாலை அதிகாரிகள் வெளிப்படுத்தியிருந்தமையினால் ஓர் ஆணும் பெண்ணும் தாமாகவே சுயவிருப்பின் பேரில் முன்வந்து இவ்வாறு கூண்டிற்குள் தம்மை அடைத்துக்கொள்வதற்கு சம்மதம் தெரிவித்தனர்.

அதற்கமைய, அவர்கள் ஆதிவாசிகளை ஒத்த ஆடையை அணியுமாறு பணிக்கப்பட்டனர்; அதன் பின்னர் அவர்கள் கூண்டில் அடைக்கப்பட்டனர். இவ்வாறு அடைக்கப்பட்டவர்களில் ஆணுக்கு வயது 24, பெண்ணுக்கு வயது 18. கூண்டுக்குள் இருந்தவாறே இவர்கள் மிருகங்களைப் போன்றே தமது நடமாட்டங்களையும் செய்கைகளையும் காட்டிக்கொள்வதால் இவர்களைப் பார்க்க வருகின்ற மக்களுக்கு அதுவோர் புதிய அனுபவமாக இருக்கின்றது. இதனால், அவ்விடத்தில் மக்கள் அலைமோதுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

மேலும், இந்தக் கூண்டிற்கு அருகே பார்வையாளர்களாக வருகின்ற மக்கள் கூண்டுக்குள் இருக்கின்ற





மனிதர்களுடன் பேசுவதற்கும் வாய்ப்பு

## கற்கால மனிதர்கள் இப்படித்தான் இருந்திருப்பார்கள் என்பதை உணர ஒரு வாய்ப்பு

வழங்கப்படுகின்றது. சிலர் தம்மிடம் உள்ள தின்பண்டங்களையும் இவர்களுக்கு வழங்குகின்றனர்.

அதுமட்டுமல்ல, இந்தக் கூண்டுக்குள் உள்ள மனிதர்களின் நடவடிக்கைகள் நாளுக்கு நாள் மாறுபடுவதாகவும் காட்டப்படுகின்றது. ஆதிகால மனிதனின் செயற்பாடுகள் இப்படித்தான் இருந்திருக்கும் என்பதை ஊகித்துக்கொள்வதற்கும் இதன் மூலம் வாய்ப்பளிக்கப்படுகின்றது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, ... 2009, டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday December 23, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org